பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2050 | ஆனி 07 சனிக்கிழமை 22.06.2019 | கதிர் 229

**இனிது ரகசியம் அல்ல!**

கல்முனைநேற்றுடன்அடங்கும் என்று பார்த்தால் அது இன்னும் சூடு பிடித்திருக்கின்றது.

உண்ணாவிரதம் இருப்போரை அதில் இருந்து மீட்பதற்கு இனி யாரும் வருவரோ, அதற்குத் தோதான சந்தர்ப்ப நிகழ்வுகள் வருமோ தெரிய பக்கம் 02

# கிழித்து வீசப்பட்டது ரணிலின் வாக்குறுதி!

## அமைச்சர்கள், எம்.பிகளைத் தாக்கவும் முயற்சி கல்முனையில் நேற்றுப் பெரும் பதற்ற நிலை




அம்பாறை, ஜூன் 22

கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்த வலியுறுத்திக் கல்முனையில் மேற்கொள்ளப்பட்டு வரும் உண்ணாவிரதப் போராட்டம் தொடர்கிறது. 3 மாதங்களுக்குள் கல்முனை உப பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என ஐ.தே.க. அமைச்சர்களும், கூட்டமைப்பு எம்.பிக்களும் சேர்ந்து நேற்று வழங்கிய உறுதிக் கடிதத்தையும் போராட்டக்காரர்கள் கிழித்து வீசினர். பக்கம் 11

## யாழ்.முஸ்லிம் மக்கள் குடியேற்றத்துக்காக வாங்கப்பட்டது சிவன் கோவில் காணியா?

### நாவாந்துறை மக்கள் அதற்குள் நுழைந்தமையால் பதற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 22

யாழ்ப்பாணத்தில் முஸ்லிம் மக்களைக் குடியமர்த்தவென நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் பின்னணியில் கொள்வனவு செய்யப்பட்டதாகக் கூறப்படும் 100 பரப்புக் காணிக்குள் நேற்று நாவாந்துறைப் பொதுமக்கள் நுழைந்ததால் பரபரப்பு ஏற்பட்டது. அது தாம் பக்கம் 11

## அடுத்த வாரம் முதல் தூக்குத் தண்டனை!



கொழும்பு, ஜூன் 22

போதைப்பொருள் கடத்தல் குற்றத்துக்காக மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களுள் முதலாமவருக் பக்கம் 11

## கடுகதி ரயிலில் மோதுண்டு மிருசுவில் பெண்மணி சாவு!



யாழ்ப்பாணம், ஜூன் 22

மிருசுவில் பகுதியில் கடுகதி ரயில் மோதி 50 வயதான பெண்மணி ஒருவா சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இந்த விபத்துச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் பக்கம் 11



## அரசியலிலிருந்து விலகத் தயாரா? விமலுக்கு ரிஷாத் நேற்றுச் சவால்!



கொழும்பு, ஜூன் 22

தன்னைப் பற்றி தொடர்ச்சியாக கூறி வரும் குற்றச்சாட்டுக்களை நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ நிரூபித்தால் அரசியலிருந்தும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்தும் தான் விலக தயார் எனவும், பக்கம் 11

## இளங்கோவனை போராளி என்கிறார் வடக்கு ஆளுநர்



யாழ்ப்பாணம், ஜூன் 22

வடக்கு மாகாணத்தின் கல்வித்துறையைச் சீர் திருத்துவதற்காக கல்விக் குத்தன்னைஅர்ப்பணித்து அதனைச் பக்கம் 11

## பெரமுனவின் வேட்பாளர் ஓகஸ்டில் வெளிவருவார்

கொழும்பு, ஜூன் 22

பொதுஜன பெரமுன வின்ஜனாதிபதிவேட்பாளரை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் இடம்பெறும் கட்சியின் தேசிய மாநாட்டில் எதிர்க் கட்சித் தலைவர் மஹிந்த ராஜ பக்கம் 11

## கல்முனைப் போராட்டத்துக்கு ஆதரவாக வவுனியாவில் 108 தேங்காய்கள் உடைப்பு



வவுனியா, ஜூன் 22

கல்முனை வடக்குப் பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்தவேண்டும்எனக் கோரி நடத்தப்பட்டு வரும் உணவு பக்கம் 11

### லலித், குகன் வழக்கு விசாரணை;

## கோட்டாபய யாழ்.நீதிமன்றத்துக்கு வராமையதால் சாட்சியம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 22

காணாமல் ஆக்கப்பட்டவர்களான லலித் மற்றும் குகன் ஆகியோரின் ஆள் கொணர்வு மனு நேற்று யாழ்ப் பக்கம் 11

## 5 ஹோட்டல்களுக்கு எதிராக சுகாதாரப் பிரிவினர் வழக்கு!

### யாழ். மேலதிக நீதிவான் மன்றில் தாக்கல்

யாழ்ப்பாணம், ஜூன் 22

யாழ்ப்பாணம் மாநகரில் இயங்கும் நட்சத்திர விடுதிகள் ஐந்தின் மீது சுகாதாரச் சீர்கேட்டுக் குற்றச்சாட் பக்கம் 02

## வவுனியாவுக்கு வந்தார் வெளிவிவகார அமைச்சர்

### காணி விடுவிப்பு குறித்து ஆராய



வவுனியா, ஜூன் 22

வவுனியாவில் படையினர் வசமுள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பில் வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று வெளிவிவகார அமைச்சர் பக்கம் 02

# மிரட்டினார் மலிங்க!

## இங்கிலாந்து அணியை வீழ்த்தி இலங்கைக்கு மகத்தான வெற்றி






நடைபெற்றுவரும் உலகக் கிண்ணத் தொடரின் 27ஆவது போட்டியில் இலங்கை அணி 20 ஓட்டங்களால் இங்கிலாந்தை வீழ்த்தி மகத்தான வெற்றியைப் பதிவுசெய்தது.

லீட்ஸிலுள்ள ஹெடிங்லே மைதானத்தில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில்வெற்றிபெற்றஇலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் ஏமாற்றமளித்தனர். எனினும் மத்திய தர துடுப்பாட்ட வீரர்களின் நிதான ஆட்டத்தின் உதவியுடன் இலங்கை அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகளை இழந்து 232 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இலங்கை அணி சார்பாக அஞ்சலோ மத்தியூஸ் ஆட்டமிழக்காமல் 85 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். அத்துடன், அவிஸ்க பெர்னாண்டோ 49 ஓட்டங்களையும், குசல் மெண்டிஸ் 46 ஓட்டங்களையும், தனஞ்சய டி சில்வா 29 ஓட்டங்களையும் அணிக்காகபெற்றுக்கொடுத்தனர். ஏனைய வீரர்கள் ஒற்றையிலக்க ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

பந்து வீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக, ஜொப்ரா ஆர்சர் மற்றும் மார்க் வூட் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளை கைப்பற்றியதோடு, அடில் ரிட் 2 விக்கெட்டுகளையும், கிரிஸ் வோக்ஸ் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இந்நிலையில் இங்கிலாந்து அணி 233 என்ற ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடியது.

இலங்கை அணி துடுப்பாட்டத்தில் சொதப்பினாலும், பந்து வீச்சு மற்றும் களத்தடுப்பில் முழுமையான திறமையை வெளிப்படுத்தி இங்கிலாந்து அணியை வீழ்த்தி மகத்தான வெற்றியைப் பெற்றது.

இங்கிலாந்து அணி 47 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 212 ஓட்டங்களைப் பெற்று 20 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

இங்கிலாந்து அணி சார்பாக பென் ஸ்ரோக்ஸ் ஆட்டமிழக்காமல் 82 ஓட்டங்களையும், ரூட் 57 ஓட்டங்களையும், இயன் மோர்கன் 21 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். ஏனைய வீரர்கள்ஒற்றைஇலக்கஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினர்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக சிறப்பாக பந்து வீசிய மலிங்க 4 விக்கெட்டுகளைக்கைப்பற்றினார். அத்துடன் தனஞ்சய டி சில்வா 3 விக்கெட்டுகளையும், இசுரு உதான 2 விக்கெட்டுகளையும் மற்றும் நுவான் பிரதீப் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இந்த வெற்றியின் மூலம் இலங்கை அணி 6 போட்டிகளில் விளையாடி இரண்டுபோட்டிகளில் வெற்றியுடன், இரண்டுபோட்டிகள் இடைநிறுத்தப்பட்ட நிலையில் தலா ஒவ்வொரு புள்ளிகளுடன் 6 புள்ளிகளைப் பெற்றுள்ளது.

இதேவேளை, இங்கிலாந்து அணி விளையாடிய 6 போட்டிகளில் 4இல் வெற்றிபெற்று 8 புள்ளிகளைப் பெற்றுள்ளது.

## நான்கு மாதங்களுக்குள் ஆட்சியைக் கவிழ்ப்பேன்

### அடித்துக் கூறுகின்றார் மஹிந்த

இலங்கையில் இன்னும் நான்கு மாதங்களில் ஆட்சி மாற்றம் ஏற்படும். இது உறுதி.

– இவ்வாறு நேற்று அடித்துக் கூறினார் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ.

தேசிய சுதந்திர முன்னணியால்விகாரமகாதேவிபூங்காவளாகத்தில் நேற்று மாலை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

உயிர்த்த ஞாயிறு தினமன்று நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் பொறுப்புக்கூறும் கடப்பாட்டிலிருந்து அரசு தப்பிக்க முயற்சிக்கின்றது. இதன்காரணமாகவே எல்லாப் பொறுப்பையும் அதிகாரிகள் மீது திணிப்பதற்கு அரசு திட்டமிடுகின்றது.

இந்தத் தாக்குதகளால் முஸ்லிம் மக்களே இன்று அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, அடிப் படைவாதிகளைப் புனர்வாழ்வுக் குட்படுத்த முஸ்லிம் அரசியல் தலைவர்கள் முன்வர வேண்டும்.

போர்முடிவடைந்து 10 ஆண்டுகள் நிம்மதியாக வாழ்ந்தோம். இன்று நிம்மதி பறிபோயுள்ளது. எனவே, நாட்டை நேசிக்கும் தலைவரொருவர் அவசியம். இன்னும் 4 மாதங்களில் இந்த அரசின் ஆயுள்காலம் முடிவடைந்துவிடும்.

எந்தத் தேர்தல் வந்தாலும் நாம் வெற்றி பெறுவது உறுதி. எமது ஆட்சியின் கீழ் மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் – என்றார். (ஐ)

## 5 ஹோட்டல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டில் யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றில் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் தனித்தனியாக வழக்குத் தொடரப்பட்டது.

அவற்றில் பிரபல நட்சத்திர விடுதி ஒன்றின் உரிமையாளர் தன் மீதான குற்றச்சாட்டை மறுத்த நிலையில் அவரை தலா 50 ஆயிரம் ரூபா ஆள் பிணையில் விடுவிக்க உத்தரவிட்ட யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் காயத்திரி சைலவன், வழக்கை எதிர்வரும் 28ஆம் திகதிவரை ஒத்திவைத்தார்.

மேலும் நட்சத்திர விடுதிகள் மூன்றின் உரிமையாளர்கள் தம் மீதான குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டதால் அவர்களில் இருவருக்கு முறையே 21 ஆயிரம் ரூபா மற்றும் 15 ஆயிரம் ரூபா தண்டம் விதித்த மேலதிக நீதிவான், அந்த நட்சத்திர விடுதிகள் இரண்டையும் மறு அறிவித்தல் வரை மூடுமாறு உத்தரவிட்டார்.

அத்துடன், நட்சத்திர விடுதி ஒன்றின் உரிமையாளர் ஒருவர் குற்றச்சாட்டை ஒத்துக்கொண்ட நிலையில் அவருக்கான தண்டனைத் தீர்ப்பை ஒத்திவைத்த மன்று, அவரது நட்சத்திர விடுதி தொடர்பான சுகாதாரச் சீடுகேடு பற்றிய அறிக்கையை மன்றில் சமர்ப்பிக்க அவகாசம் வழங்கி வழக்கை எதிர்வரும் 28ஆம் திகதிவரை ஒத்திவைத்தது.

மேலும் இதே குற்றச்சாட்டை முன்வைக்கப்பட்ட நட்சத்திர விடுதி உரிமையாளர் ஒருவர் நேற்று மன்றில் முன்னிலையாகத் தவறினார். அவருக்கு அழைப்புக் கட்டளை அனுப்ப உத்தரவிட்ட மேலதிக நீதிவான் காயத்திரி சைலவன், வழக்கை எதிர்வரும் 28ஆம் திகதி வரை ஒத்திவைத்தார். (ஐ-07)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை.

கல்முனை வடக்குத் தனிப்பிரதேச செயலர் பிரிவை நிதி மற்றும் காணி அதிகாரங்களோடு முழு அளவில் இயங்கச் செய்வதற்கு அரசை எழுத்தில் இணங்க வைத்ததே இந்தப் போராட்டம்தான். இத்தகைய வாய்ப்புகளைச் சரியாகப் பயன்படுத்தத் தெரிந்து கொண்டால்தான் போராட்டத்தின் விளைவுகளை வெற்றியாக்க முடியும்.

மேற்படி பிரதேச சபைக்கு ஒரு அதிகாரமுள்ள தனிக் கணக்காளரை உடனடியாக அரசு நியமித்தமையே போராட்டக் காரர்களுக்கு உடனடியாகக் கிடைத்த வெற்றிதான் என்பேன்.

அந்தக் கணக்காளர் அம்பாறை மாவட்டச் செயலகத்திலிருந்து இயங்குவார் என்று அரசு குறிப்பிட்டதாயினும், சுமந்திரன் மற்றும் ஏனையோரின் வற்புறுத்தலுக்கு அமைய நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் அவரை மேற்படி கல்முனை வடக்குப் பிரதேசெயலகத்திலேயேபோயிருந்து செயற்படும்படி பணிப்பதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று மாலை இணங்கினார் என உறுதியான – நம்பகமான – தகவல் கிடைத்தது.

ஆக, நிதி அதிகாரம் அந்தப் பிரதேச சபைக்குத் தனியானதாக வழங்கப்பட்டு விட்டது.

காணி அதிகார விடயத்தையும் கால இழுபறி இல்லாமல் தீர்க்க வேண்டும்.

மேற்படி கல்முனைப் பிரதேசத்தில் மொத்தம் 58 கிராம சேவையாளர் பிரிவுகள். இவற்றில் சரி பாதி முஸ்லிம்கள் அதிகம் வாழ்வது. எஞ்சிய 29 கிராம சேவையாளர் பிரிவுகளும் தமிழ்ப் பிரதேச செயலகப் பகுதிக்குள் வருகின்றன.

தமிழர்களுக்குரிய இந்த கிராம சேவையாளர் பிரிவுகளும் தரை வழியாக – நில ரீதியாக – ஒன்றுபட்ட பிரதேசங்கள். அவை தொடர்பற்ற பல்வேறு துண்டுப் பிரதேசங்கள் அல்ல.

ஆனால், அந்த 29 கிராம சேவையாளர் பிரிவுகளும் தமிழ்ப் பிரதேச செயலகத்திற்குக் கீழ் தனியாகச் செயற்படத் தொடங்கினால், முஸ்லிம்களின் எஞ்சிய 29 கிராமசேவையாளர்பிரிவுகளும் நிலத் தொடர்பு துண்டிக்கப்பட்ட இரண்டு, மூன்று பிரதேசங்களை ஒன்றினைத்துச் செயற்படுவதாக இருக்கும். இதுதான் இவ்விடயத்தில் முஸ்லிம்களின் பக்கத்தில் கூறப்படக் கூடிய ஒரேயொரு குறைபாடு.

இந்த இரண்டு பிரதேச செயகர்களுக்கான காணி பிரிப்பு நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தவே சிறிது காலம் தேவைப்படுகின்றது என்பது அரசுத் தரப்பு வாதம்.

அதற்குக் காலம் எடுக்குமோ, இல்லையோ, இருக்கின்ற ஏற்பாட்டின்படி தமது 29 கிராம சேவையாளர் பிரிவு என்ற நில அளவில் ஓர் அங்குலத்தைக் கூட விட்டுக் கொடுக்க முடியாது என்று தமிழ்க் கூட்டமைப்புக் கூட, நேரடியாகப் பிரதமரிடம் எடுத்துக் கூறி விட்டதாகத் தகவல்.

இதற்கு மேல் கல்முனை விவகாரம் எப்படி நகரப் போகின்றது என்று தெரியவில்லை.

உண்ணாவிரதம் இருப்போரை கைவிடச் செய்யும் முயற்சி கொழும்பிலிருந்து வராமல் போனாலும் போகலாம்.

இந்த விடயத்தை சூடேற்றி, பதற்றமாகி, உண்ணாவிரதக் களேபரத்தை அனல் பறக்கச் செய்திருக்கும் வியாழேந்திரன் எம்.பி., கருணாதரப்பு, இன்பபாரதி போன்றோர் உண்ணாவிரதிகளை அவர்களுக்குரிய மதிப்போடும் கௌரவத்தோடும் பிழைக்க வைக்க நடவடிக்கை எடுப்பார்களா? அல்லது தங்களது சுயநல அரசியலுக்காகக் கவனிக்காமல் விடப்பண்ணி விடுவார்களா தெரியவில்லை.

இந்த விடயத்தில் அடுத்து வரும் நாள்கள் இனி முக்கியமானவை.

வடக்கின் 'பயர் பிராண்ட்' அரசியல்வாதி எம்.கே.சிவாஜிலிங்கம், வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா, முன்னாள் மாகாண அமைச்சர் அனந்தி சசிதரன், இலங்கை சிவசேனைத் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தன் போன்றோர் கல்முனை உண்ணாவிரதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடுவதற்காக நேற்றிரவு தனி வாகனம் ஒன்றில் யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டுச் சென்றனர். இன்று காலை அவர்கள் கல்முனையைச் சென்றடைவர்.

அவர்களாவது இந்த உண்ணாவிரதிகளை அந்தப் போராட்டத்தைக் கைவிடச் செய்து சுமுகமாகப் பிரச்சினையைத் தீர்க்க முயல்வார்களாயின் அது நல்லது.

- மின்னல் -

## வவுனியாவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசேட சந்திப்பொன்றை மேற்கொண்டார்.

வவுனியா மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம் பெற்ற இந்தக் கூட்டத்தில் வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன மற்றும் அமைச்சின் செயலாளர், இராணுவத்தின் வன்னிக் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் குமுது பெரேரா, பொலிஸ் அதிகாரிகள், விமானப்படை அதிகாரிகள், வவுனியா மாவட்ட அரச அதிபர், வவுனியாவின் நான்கு பிரதேச செயலாளர்கள், வன வளத்திணைக்கள அதிகாரிகள் மற்றும் வட மாகாணக் காணி ஆணையாளர் உட்பட நில அளவைத்திணைக்கள அதிகாரிகளும் கலந்துகொண்டிருந்தனர்.

வவுனியாவில் பாதுகாப்பு படைகளின்வசமுள்ளகாணிகளை விடுவிப்பது தொடர்பில் இங்கு கலந்துரையாடப்பட்ட நிலையில் செட்டிகுளம் மெனிக்பாம் பகுதியில் அருவித்தோட்டத்தில் இராணுவம் கையப்படுத்தியுள்ள 123 ஏக்கர் காணியை விடுவிப்பது தொடர்பில் கரிசனை எடுக்கப்பட்டு கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது வனவளத்திணைக்களத்திடம் இராணுவத்தினரின் பாவனைக்காக மாற்றுக் காணிகள் கோரப்பட்டதாகவும் கூறப்பட்டது.

எனினும் இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட விடயம் தொடர்பில் வெளிவிவகார அமைச்சரோ ஏனைய அதிகாரிகளோ கருத்துக்கூற மறுத்துவிட்டனர். (ஐ)

# சிறுபிள்ளைத்தனமாக நடக்கிறார் ஜனாதிபதி

## செல்வம் அடைக்கலநாதன் சாடல்

**வவுனியா, ஜூன் 22**

**நாடாளுமன்றத் தெரிவுக்குழு விடயத்தில் ஜனாதிபதி சிறுபிள்ளைத் தனமாக நடந்து கொண்டிருக்கிறார் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.**

**ஊடகவியலாளர் ஒருவர் நேற்று எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாடாளுமன்றத் தெரிவுக்குழு விடயத்தில் ஜனாதிபதி சிறுபிள்ளைத்தனமாக நடந்து கொண்டிருக்கிறார். நாடாளுமன்றம் முடக்கப்பட்டாலும் கூட நாடாளுமன்றத் தெரிவுக் குழுவைக் கலைக்க முடியாது. நாடாளுமன்றம்தான் மக்களின் சக்தியாக இருக்கின்ற சட்டங்களை இயற்றுகின்ற, நீதித்துறைக்கு வலுச் சேர்க்கின்ற அமைப்பாக இருந்து கொண்டிருக்கின்றது.

அந்தவகையில் இந்தத் தெரிவுக் குழுவைக் கலைப்பதற்கு ஜனாதிபதியாலும் முடியாது. தன்னைப் பற்றிய செய்திகள் வெளியில் வரக் கூடாது என ஜனாதிபதி கருதுகிறார் எனத் தெரிகிறது. தெரிவுக் குழுவை நிறுத்தவேண்டும் என்று அமைச்சரவைக் கூட்டத்தை முடக்கியுள்ளார். சட்ட ரீதியாகக்கூடத் தெரிவுக் குழுவை நிறுத்த முடியாது. ஆகவே ஜனாதிபதி அவர்கள் தனது அதிகாரம் என்ன என்பதைப் புரியாது செயற்படுகின்றார் என்பது எனது கருத்து.

இதனை நியாயமாகப் பார்க்கவேண்டும். யார் பிழை செய்தாலும் பிழை என்பது ஏற்றுக் கொள்ளப்படவேண்டும். பாதுகாப்புக்கு பொறுப்பாக இருப்பவர் ஜனாதிபதி. பாதுகாப்புக் குழுக் கூட்டம் கூட்டப்படுகின்றபோது பிரதமர் மற்றும் பொலிஸ்மா அதிபரை அழைக்கக்கூடாது என அவர் சொல்லியிருக்கிறார் எனச் சாட்சியமளித்தவர்கள் கூறியுள்ளனர்.



பாதுகாப்பு சம்பந்தமான முழுப் பொறுப்பையும் ஜனாதிபதி தான் எடுக்கவேண்டும். ஏனெனில் பாதுகாப்பு அமைச்சராக அவர்தான் இருக்கின்றார். உலக நாடுகளின் புலனாய்வுத் துறையினர் ஒரு வாரம், இரு வாரங்களுக்கு முன்னரே தாக்குதல் தொடர்பில் கூறியுள்ளார்கள். இதன்பின் கூட அலட்சியப் போக்கு காணப்பட்டுள்ளது. ஜனாதிபதியை குறை கூறும்போது கட்சித் தலைவர் என்ற வகையில் சுதந்திரக் கட்சி அதனை எதிர்க்கும்.

ஆனால் என்னைப் பொறுத்தவரை ஜனாதிபதி சரியோ, பிழையோ அதனை ஏற்க வேண்டும். நியாயமான கருத்துக்கள் வருகின்றபோது அதனை ஏற்க வேண்டும். பாதுகாப்புக்கும், நடந்த சம்பவத்துக்கும் பொறுப்புக் கூறவேண்டியவர் ஜனாதிபதியே – என்றார். (ஐ – 100)

## கையூட்டு, மோசடிகளில் ஈடுபடும் உயரதிகாரிகள் தண்டிக்கப்படுவர்

### வடக்கு ஆளுநர் ராகவன் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 22

வடக்கு மாகாணத்தில் கையூட்டு பெறும் மற்றும் மோசடிகளில் ஈடுபடும் அனைத்து உயரதிகாரிகளும் தண்டிக்கப்படுவார்கள் என்று ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார்.



வடக்கு மாகாண அரச சேவையில் கையூட்டு மற்றும் மோசடிகளை ஒழிக்கும் முகமாகவும் இது தொடர்பான விழிப்புணர்வை அரச அதிகாரிகள் , ஊழியர்களுக்கு ஏற்படுத்தும் ஆளுநரின் எண்ணக்கருவுக்கு அமைவாக, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சரத்துக்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் வடக்கு மாகாணக் கல்வித் துறையின் அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள் மற்றும் மாணவர்களுக்கான இலஞ்ச ஊழல் ஒழிப்பு தொடர்பான ஆரம்ப விழிப்புணர்வு செயற்திட்டம் நேற்று முன் தினம் முற்பகல் யாழ் மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றபோது நிகழ்வை ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே ஆளுநர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.


இலஞ்ச ஊழலற்ற முன்மாதிரியான மாகாணமாக வடக்கை மாற்றுவதற்கு அரச அதிகாரிகள் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் கேட்டுக் கொண்டார். (ஐ)

## ரயில் வேலைநிறுத்தம் காரணமாக வவுனியாவில் பயணிகள் பாதிப்பு

வவுனியா, ஜூன் 22

இலங்கை ரயில் சாரதிகள் தொழிற்சங்கம் மேற்கொண்டு வரும் பணிப்புறக்கணிப்பு காரணமாக வவுனியாவில் பயணிகளுக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

வவுனியா ரயில் நிலையம் மூடப்பட்டு இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. அது பயணிகள் இன்றி வெறிச்சோடிக் காணப்படுகின்றது.



ரயில் நிலையத்திற்குச் சென்ற பயணிகள்வேலைநிறுத்தம் காரணமாக திரும்பிச் சென்றமையைஅவதானிக்க முடிந்தது. (ஐ

## வவுனியா குளங்களை நோக்கி படையெடுக்கும் கொக்குகள்!



வவுனியா, ஜூன் 22

வவுனியாவில் குளங்களை நோக்கிக் கொக்குகள் படையெடுத்து வருகின்றன.

வவுனியாவில் வறட்சியான காலநிலை நீடிப்பதால் குளங்கள் மற்றும் நீர் நிலைகளின் நீர் மட்டம் வற்றியுள்ளது. இதன் காரணமாக குளங்களில் மீன்கள் மற்றும் நீர்வாழ் உயிரினங்கள் உயிருக்காக போராடுவதுடன் இறந்தும் வருகின்றன.



அவற்றை உணவாகப் பெற்றுக் கொள்வதற்காகக் கொக்குகள் இரை தேடிக் குளங்களை நோக்கிப் படையெடுத்து வருகின்றன. இதனால் குளப்பகுதிகள் கொக்குளால் நிறைந்துள்ளன. (ஐ – 100)

## இனிய வாழ்வு இல்லத்தில் கலை விழா










முல்லைத்தீவு, ஜூன் 22

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வள்ளிபுனம் பகுதியில் சிறப்புற இயங்கி வரும் மாற்றுத்திறனாளி பிள்ளைகளின் காப்பகமான இனிய வாழ்வு இல்லத்தின் மாபெரும் கலை விழா நிகழ்வு நேற்று முன் தினம் காலை முதல் மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.

இனிய வாழ்வு இல்ல சிறார்களின் கலை அம்சங்களை வெளிக்கொணரும் முகமாக இனிய வாழ்வு இல்ல நிர்வாகத்தினர் ஏற்பாடு செய்திருந்த இந்த மாபெரும் விழாவில் கலை விழா, பரிசளிப்பு விழா, இனியவள் என்கின்ற மலர் வெளியீட்டு விழா என்பன இடம்பெற்றன.

நேற்று முன் தினம் காலை 9 மணியளவில் இனிய வாழ்வு இல்ல வாயிலிலிருந்து விருந்தினர்கள் இனிய வாழ்வு இல்ல மாணவர்களின் கலை அம்சங்களோடு வரவேற்கப்பட்டனர். தொடர்ந்து இனிய வாழ்வு இல்லத்தில் அமைக்கப்பட்டிருக்கும் விளையாட்டு முற்றத்தின் திறப்புவிழாநிகழ்வு இடம்பெற்றது. விளையாட்டு முற்றத்தை வடக்கு மாகாண சமூக சேவைகள்திணைக் களத்தின் பணிப்பாளர்வனஜாசெல்வரத்தினம் நாடா வெட்டி திறந்து வைத்தார்.

விளையாட்டு முற்றத் திறப்பு விழாவைத் தொடர்ந்து ஏனைய கலை நிகழ்வுகள் இடம் பெற்றன. மாற்றுத்திறனாளிப் பிள்ளைகளின் பல்வேறுபட்ட திறமைகளை வெளிக்கொணரும் வகையில் சிறப்பான முறையில் பல்வேறு கலை நிகழ்வுகள் இடம் பெற்றன. இந்த இல்லத்தில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசளிப்பும் இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து இந்த இல்லத்தின் வரலாறுகளைத் தாங்கி நிற்கின்ற ஓர் ஆவணப் புத்தகமாக இனியவள் நூல் வெளியீடும் இடம்பெற்றது.

இந்த மாபெரும் கலை விழா நிகழ்வில் வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் வனஜா செல்வரத்தினம், முல்லைத்தீவு மாவட்ட உதவி மாவட்டச் செயலாளர் திருமதி லதுமீரா, புதுக்குடியிருப்புப் பிரதேச செயலாளர் ம.பிரதீபன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ஆ. புவனேஸ்வரன் உள்ளிட்ட பிரமுகர்கள், கல்விமான்கள், இனிய வாழ்வு இல்ல நிர்வாக இயக்குநர் சபை உறுப்பினர்கள், பெற் றோர்கள், நலன்விரும்பிகளெனப் பலர் கலந்துகொண் டனர். (ஐ)

## நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

# கூட்டமைப்பும் தேர்தலுக்கு எதிரா?

**நாம் இப்பத்தியில் ஏனவே பல தடவைகள் சுட்டிக் காட்டிய படி மாகாண சபைத் தேர்தல்கள் வேண்டுமென்றே நடத்தப் படாமல் இழுத்தடித்துக் கொண்டு செல்லப்படுகின்றது.**

**பெரும்பாலும் அனைத்து அரசியல் கட்சிகளும் வெளிப் பேச்சுக்கு – பகட்டுக்கு – மாகாண சபைகள் தேர்தல் நடத்தப் படவேண்டும் என்று பேசிக் கொண்டு, உள்ளூற அதற்காக எந்தக் காய் நகர்த்தலையும் செய்யாமல் இருக்கின்றன என்பதுதான் அப்பட்டமான உண்மை.**

**இது விடயத்தில் – மக்களின் வாக்குரிமை விவகாரத்தில் – அனைத்து அரசியல் கட்சிகளும் மக்களின் தலையில் மிளகாய் அரைக்கின்றன என்பதே யதார்த்தமாகும்.**

**மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் தள்ளிப் போடுவது மக்களின் இறைமையை மீறும் செயல் என்று உயர் நீதிமன்றம் திட்டவட்டமாகவும், தெளிவாகவும் தீர்ப்பு எழுதிய பின்னரும், மக்களின் இறைமையை மீறும் அந்தச் செயலைத்தான் அரசு தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றது. அரசுக்கு முண்டு கொடுத்து வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போன்ற கட்சிகளும் அதனையே மேற்கொண்டு வருகின்றன என்பதுதான் நிதர்சனமான நிலைப்பாடாகும்.**

**ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் மாகாண சபைத் தேர்தலை எதிர்கொண்டு அதன் மூலம் மக்கள் ஆதரவுத் தளம் தொடர்பான தங்களின் பொட்டுக்கேடு வெளி வெளியாகி விட்டால், ஜனாதிபதித் தேர்தலில் தமது தரப்பு வெல்வதற்குக் கிஞ்சித்தும் இருக்கக் கூடிய வாய்ப்புக் கூட முழுமையாக அடிபட்டுப் போய்விடும் என்று ஆளும் ஐக்கிய தேசிய முன்னணி அரசு அஞ்சுகின்றது.**

**அதனால் மாகாண சபைத் தேர்தலை பிள்ளையார் கலியாணம் போல நாளைக்கு, நாளைக்கு என்று இழுத்தடித்து வருகின்றது அது.**

**இப்படி ஆளும் தரப்பு, மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு திராணியற்று, அஞ்சி, அதற்கான முன்முயற்சி எதனையும் எடுக்காமல் வேண்டுமென்றே தள்ளிப்போட்டுக் கொண்டு வருகின்றது என்று தெரிந்தும் – புரிந்தும் – அதற்கும் சேர்த்து ஆதரவளித்து வருகின்றது கூட்டமைப்பு.**

***“மக்களின் வாக்களிக்கும் உரிமை எக்காரணம் கொண்டும் மறுக்கப்படக் கூடாது. மிக விரைவில் இந்த மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.”*** **– என்ற சாரப்பட, ஒப்புக்குச் சப்பாணிபோல நாடாளுமன்றத்தில் கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தன் பேசியமையோடு சரி, அதற்கு மேல் இந்தத் தேர்தலை நடத்திக் கொள்வதற்கு ஒரு துரும்பைத் தன்னும் அவரும் அவரது கூட்டமைப்புக் கட்சியினரும் அசைத்தார்கள் என்பதற்குச் சான்று ஏதும் இல்லை.**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவில்தான் இந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசே உயிர் பிழைத்து நிற்கின்றது என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை.**

**அந்த வலிமையை வைத்து எத்தனையோ விடயங்களைப் பேரம் பேசி பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்பு கூட்டமைப்புக்கு உண்டு.**

**அவை எவற்றையும் செய்யாமல் வெறுமனே தொகுதிக்கு முப்பது கோடி ரூபா ‘கம்பெரலிய’ திட்டத்துக்குப் பின்னால் அலைந்து கொண்டிருக்கின்றது அக்கட்சி.**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் கூறியபடி, முன்னர் நடைமுறையில் இருந்த மாகாணசபைத் தேர்தல் சட்டத்தை மீள நடைமுறைக்குக் கொண்டு வருதல் என்ற ஒரு வரித் தீர்மானம் ஒன்றை நாடாளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றினாலே போதும் , அடுத்த மூன்று மாதத்துக்குள் நாடு முழுவதிலும் மொத்தம் ஒன்பது மாகாணங்களில் எட்டில் நிலுவையாக இருக்கும் மாகாண சபைத் தேர்தலை நடத்தி முடித்து விடமுடியும்.**

**ஆனால், அப்படி ஒரு பிரேரணையைக் கொண்டு வரச் செய்து, அதை நிறைவேற்றி, மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்த வைக்கும் அழுத்தத்தைக் கூட்டமைப்புத் தலைமை முன்னெடுக்காமலேயே இருக்கின்றது.**

**அதனை நோக்கும் போது, உடனடியாக மாகாண சபைத் தேர்தலை எதிர்கொள்ளும் விருப்பம் கூட்டமைப்புக்கு இல்லை என்றோ அல்லது அத் தேர்தலை இன்றைய கட்டத்தில் எதிர்கொள்வதற்கு ஐக்கிய தேசிய முன்னணியுடன் சேர்ந்து கூட்டமைப்புக்கும் கூட அச்சமோ என்றுதான் எண்ணத் தோன்றுகின்றது.**

**ஆண்டு இறுதியில் நடக்கவிருக்கும் ஜனாதிபதித் தேர்தல் வரை பொறுத்திருந்து, அதன் பின்னர் மாகாண சபைத் தேர்தலை எதிர்கொள்வது என்ற ஏற்பாடு கூட்டமைப்புக்கும் கூட ஆபத்தானதாக மாறக் கூடும்.**

**நிறைவேற்று அதிகார ஜனாதிபதித் தெரிவில் எதிர்பாராத மாற்றம் நேருமாயின் அதற்குப் பின்னர் வடக்கு, கிழக்கில் நடக்கக் கூடிய மாகாண சபைத் தேர்தல்களிலும் கூட்டமைப்புக்கு – குறிப்பாகத் தமிழ்த் தேசிய சக்திகளுக்கு – அது பெரும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய விளைவுகளை தந்து விடலாம்.**

**ஆகவே, கூட்டமைப்பு இப்போதே புத்திசாலித்தனமாக நடந்து கொள்வது நல்லது.**

# கிராம வளங்கள் மூலம் வாழ்க்கைமுறையை மேம்படுத்தும் உத்திகளை வகுக்க வேண்டும்

## வலி.கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் நிரோஷ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 22

எமது கிராமத்தில் எம்மைச் சூழ காணப்படும் வளங்களைக்கொண்டு அவ் வளங்களை உச்சமாகப் பயன்படுத்தி தொழில் துறைகளைவடிவமைப்பதாகஎமது இலக்குகள் காணப்படவேண்டும். இவ்வாறு வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

சிறுப்பிட்டி ஜனசக்தி மண்டபத்தில் வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகத்தின் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக மக்களின் சிபாரிசுகளையும் ஆலோசனைகளையும் பெறுவதற்கான கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சிறப்புரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் –

ஒரு காலகட்டத்தில் அரசியல் தலைமைத்துவமும் அதிகாரிகளும் நினைப்பதை அல்லது வழங்குவதை மக்கள் அபிவிருத்தியாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற நிலை காணப்பட்டது. ஆனால் இப்போது மக்களுக்கு எவ்விடயம் அபிவிருத்தியாக முன்னுரிமைப்படுத்தப்பட வேண்டுமோ அதனை அவர்கள் முன்மொழிந்து பெற்றுக்கொள்வதற்கான சரியான சந்தர்ப்பம் கிட்டியுள்ளது. இதனை நாம் பொருத்தமான அபிவிருத்திக்குப் பயன்படுத்த வேண்டிய தேவையுள்ளது. காரணம் நாம் நமக்கான அபிவிருத்தியை தீர்மானிப்பவர்களாக சக்திமயப் படுத்தப்பட்டிருக்கின்றோம்.

எங்களுக்கு பல தேவைகள் காணப்படலாம். அவற்றினை எல்லாம் நாம் அபிவிருத்திக்கான அடிப்படைகளாகக் கருதிவிடக்கூடாது. நீங்கள் அரச முதலீட்டின் வாயிலாக ஒரு திட்டத்தினை நிறைவேற்றுகின்றீர்கள் என்றால் அதற்குள் முக்கியமாக உங்கள் பகுதியில் காணப்படும் வளங்கள் பயன்பாடுடையதாகின்றனவா? சுற்றாடல் பாதுகாக்கப்படுகின்றதா? நீங்கள் முன்மொழிந்த அபிவிருத்திகள் வாயிலாக எதிர்காலத்தில் இந்தக் கிராமத்தில் என்ன முன்னேற்றம் ஏற்படுகின்றது போன்றவற்றில் கவனம் செலுத்துங்கள். உங்கள் அபிவிருத்தி தொடர் பான நாட்டத்தினை தகவமைத்துக்கொள்ளுங்கள். அவ்வாறு நாம் செய்யாவிட்டால் அபிவிருத்தியின் வாயிலாக நாம் பயனடையப்போவதில்லை.

இன்று எம் முன் உள்ள அபிவிருத்திக்கான சவால்களில் கிரமம் தோறும் காணப்படும் வளங்களை நாம் உரியவாறு பயன்படுத்தத் தவறி வருகின்றமை எம்மைப் பாதிக்கின்றது. இருப்பதைக்கொண்டு ஒரு கிராமமாக, ஒருபிரதேசமாக நாம் எவ்வாறு முன்னேறலாம் எனச் சிந்தித்துச்செயலாற்றவேண்டும். அதற்காகசனசமூக நிலையங்களில் கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்படுவதற்கான சூழ்நிலைகளை ஏற்படுத்துமாறு நான் அரச உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்துகின்றேன்.

இலங்கையில் கிராம மட்டத்தில் சரியான அரச நிர்வாகக் கட்டமைப்பு தேவைக்கேற்றதாகக் காணப்படுகின்றது. கிராமசேவகர், சமுர்த்தி உத்தியோகத்தர், அபவிருத்தி உத்தியோகத்தர் இவற்றுக்கு மேலாக தற்போது வட்டாரம் தோறும் பிரதேச சபை உறுப்பினர்களும் காணப்படுகின்றனர். ஆகவே எம்மைச் சுற்றி பல்வேறு கருமங்களை ஆற்றத்தக்க அரச நிர்வாகம் உள்ளது. இவ்வாறான நிலையில் நாம் சகல சூழ்நிலைகளையும் சரியாகப் பயன்படுத்த வேண்டும். அது போன்று அதிகாரிகள், உத்தியோகத்தர்களும் தமது பணியை மக்கள் மீண்டெழவேண்டும் என்ற இலட்சியத்துடன் புரிய வேண்டும் – என்றார். (ஐ)

# பொம்பியோவின் பயணம் ரத்துக்கும் சோபாவுக்கும் தொடர்பு ஏதுமில்லை

## மூத்த அமெரிக்க அதிகாரி தகவல்

கொழும்பு, ஜூன் 22

அமெரிக்க இராஜாங்கச் செயலர்மைக்பொம்பியோவின் இலங்கைப் பயணம் ரத்துச் செய்யப்பட்டதற்கும், ‘சோபா’ உடன்பாட்டுக்கும் எந்த தொடர்பும் இல்லை என, மூத்த அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு வரும் 24 ஆம் திகதி பயணம் மேற்கொள்ளும் அமெரிக்க இராஜாங்கச் செயலர் மைக் பொம்பியோ, இலங்கைக்கு எதிர்வரும் 27 ஆம் திகதி குறுகிய பயணம் ஒன்றை மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்தார்.

எனினும், தவிர்க்க முடியாத திட்டமிடல் முரண்பாடுகளால், அவரால் இலங்கைக்கான பயணத்தை இம்முறை மேற்கொள்ள முடியாமல் போயுள்ளதாகக் கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் அறிவித்திருந்தது.

அமெரிக்காவுடனான படைகளை நிலைப்படுத்தல் தொடர்பான ‘சோபா’ உடன்பாட்டுக்கு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றன.

இந்த நிலையிலேயே, அமெரிக்க இராஜாங்கச் செயலர் மைக் பொம்பியோவின் பயணம் ரத்துச் செய்யப்பட்ட அறிவிப்பு வெளியாகியது.

இது குறித்து கருத்து வெளியிட்ட அமெரிக்க உயர் அதிகாரி ஒருவர், பொம்பியோவின் இந்தப் பயணத்தின்போது, ‘சோபா’ உடன்பாடு குறித்துப் பேசத் திட்டமிடப்பட்டிருக்கவில்லை. அவரது இலங்கைப் பயணம் ரத்துச் செய்யப்பட்டதற்கும், ‘சோபா’ உடன்பாட்டுக்கும் தொடர்பு இல்லை என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை, அமெரிக்க இராஜாங்கச் செயலர் மைக் பொம்பியோ இலங்கை வரத் திட்டமிட்டிருந்தபோது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கம்போடியா, லாவோஸுக்குப் பயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்தார்.

எனினும், இந்தப் பயணம், ஓகஸ்ட் மாதத்துக்குப் பிற்போடப்பட்டுள்ளதாக கடந்த செவ்வாய் இரவே தமக்கு தெரியவந்தது எனவும் அந்த அமெரிக்க அதிகாரி கூறியுள்ளார். (ஐ)

# சட்டவிரோத நடைபாதையை அகற்றிய வவுனியா நகர சபை



வவுனியா தர்மலிங்கம் வீதிக்கு அருகே காணப்பட்ட சட்டவிரோத நடைபாதை நேற்றுக் காலை வவுனியா நகரசபையினரால் அகற்றப்பட்டது.

வவுனியா தர்மலிங்கம் வீதிக்கு அருகே காணப்படும் வர்த்தக நிலையத்துக்கு முன்பாக கடந்த சில நாள்களுக்கு முன்னர் வவுனியா நகரசபையின் அனுமதியின்றி கொங்கிறீட் மூலம் அமைக்கப்பட்ட நடைபாதையை நகரசபை ஊழியர்கள் அகற்றினர். பொதுமகனொருவர் வவுனியா நகரசபைக்கு மேற்கொண்ட முறைப்பாட்டினை அடுத்தே இந்த கொங்கிறீட் நடைபாதை அகற்றப்பட்டது. (ஐ – 100)

## நாளை

**23.06.2019**
**ஞாயிற்றுக்கிழமை**
நட்சத்திரம்: சதயம் மு.இ 11.36 வரை
திதி : ஷஷ்டி மு.இ 10.59 வரை
இராகுகாலம் :4.24 – 5.54
சுப நேரம் : 8.54 – 10.24

# மக்களை ஏமாற்றி கண்கட்டி வித்தை காட்டுகின்றது தமிழ்க் கூட்டமைப்பு

## சாடுகின்றார் அனந்தி சசிதரன்



(எஸ்.நிதர்ஷன்)

**யாழ்ப்பாணம், ஜூன் 22**
**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தாமாகவே ஒவ்வொன்றைக் கூறி மக்களை ஏமாற்றும் வகையில் கண்கட்டி வித்தை காட்டி வருகின்றனர் என ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகத்தின் பொதுச் செயலாளரும் முன்னாள் வடக்கு மாகாண சபை அமைச்சருமான அனந்தி சசிதரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.**

சுழிபுரத்தில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று முன்தினம் நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டில் ஆளும் கட்சியாக ஐக்கிய தேசியக் கட்சி இருக்கின்றது. அதேநேரம் பிரதமராக அந்தக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் அமைச்சர்களாக அந்தக் கட்சியின் உறுப்பினர்கள் பலரும் இருக்கின்றனர். இந்த அரசுக்கு முண்டு கொடுத்து காப்பாற்றி வருவதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான்.

ஆகவே தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஆட்சியில் இருக்கும் பிரதமர் மற்றும் அமைச்சர்களுடன் கூட்டமைப்பினர் பேசாமல் ஊடகங்கள் முன்னிலையில் தற்போது பேசுகின்றனர். அவ்வாறாயின் எதுவுமே செய்யாத அரசுக்கு ஏன் ஆதரவை வழங்கி வருகின்றனர் என்ற கேள்வி எழுகின்றது.

ஏனெனில் மிக முக்கியமாக இனப் பிரச்சினைக்கான தீர்வை நோக்கிய இலக்கை அடைந்தே தீருவோம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கூறுகின்றார். அதே நேரத்தில் இனப் பிரச்சினைக்கான தீர்வு வராது என்றும் அரசு தொடர்ந்தும் ஏமாற்றி வருவதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன் கூறுகின்றார். படுக்கை அறை வரை ஆக்கிரமிப்பு வந்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசா தெரிவித்திருக்கின்றார்.

ஆக மொத்தத்தில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் மாறி மாறித் தமது எண்ணங்களின் பிரகாரம் ஊடகங்களுக்குக் கருத்துக்களை வெளியிட்டிருக்கின்றனர். உண்மையில் தமிழ் மக்களின் இனப்பிரச்சினையாக இருக்கட்டும், நில ஆக்கிரமிப்பாக இருக்கட்டும் இத்தகைய பிரச்சினைகள் எல்லாவற்றையும் தீர்த்து வைப்போம் என்று கூறிய இதே நாடாளுமன்ற உறுப்பினர்கள் இப்போது வெவ்வேறு கருத்துக்களைக் கூறத் தலைப்பட்டுள்ளனர்.

இந்த அரசைக் கொண்டு வந்தது தாமே என்றும் அரசுடன் இதயங்களால் இணைந்துள்ளோம் என்றும் இந்த அரசுக்கு முண்டு கொடுத்து வருகின்றோம் என்றும் வெளிப்படையாகக் கூறி வந்த கூட்டமைப்பினர் தமிழ் மக்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்குமான தீர்வுக்கு உரிய நடவடிக்கைகள் எதனையும் எடுக்காமல் வெறுமனே அரசைப் பாதுகாத்து வருகின்ற செயற்பாட்டைத்தான் செய்து வருகின்றனர்.

இதேவேளை, கல்முனை வடக்குப் பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்தக் கோரி பெரும் பாராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்தப் பிரதேச செயலகத்தைத் தரம் உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டிய அரசும் சரி அதற்கான அழுத்தத்தைக் கொடுத்துப் பேசவேண்டிய கூட்டமைப்பும் சரி இந்த விடயத்தில் அக்கறையற்ற போக்குடனேயே செயற்படுகின்றன.

உண்மையில் இந்தப் பிரச்சினை பாரதூரமான பிரச்சினை அல்ல. இதனைப் பேசித் தீர்த்திருக்கவேண்டும். ஆனால் அதனைச் செய்யாததாலேயே தற்போது அந்தப் பிரதேசத்தில் இன முரண்பாடு ஏற்படுத்தப்படுகின்றது. ஆனால் இப்போது அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தின்போது அமைச்சரவைப் பத்திரம் ஊடாக இதனைச் செய்வதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்திருக்கிறார் எனக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆனால் தமிழ் மக்கள் விடயத்தில் பலவற்றைச் செய்வதாகப் பல சந்தர்ப்பங்களிலும் பல்வேறு வாக்குறுதிகளைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வழங்கியிருக்கின்றபோதும் உண்மையில் அவை எவையும் நிறைவேற்றப்படாத நிலையே இருக்கின்றது. ஆகவே இனியும் பிரதமரை அல்லது அமைச்சர்களை வெறுமனே நம்பிக்கொண்டிருப்பதில் அர்த்தமில்லை.

ஆகையினால் அவர்கள் வழங்கும் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்குரிய அழுத்துங்களைக் கொடுத்து அவற்றை நிறைவேற்றிக் கொள்வதற்கு நடவடிக்கைகளைக் கூட்டமைப்பினர் எடுப்பதுடன் தமிழ் மக்களது நலன்களுக்காக இதய சுத்தியுடன் செயற்பட வேண்டும் – என்றார்.

## ரயில் நிலையங்களுக்கு இராணுவப் பாதுகாப்பு

*கொழும்பு, ஜூன் 22*

*ரயில் தொழிற்சங்கங்கள் ஆரம்பித்துள்ள வேலைநிறுத்தம் காரணமாக ரயில் நிலையங்களின் பாதுகாப்புக்காக இராணுவம் மற்றும் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.*

*இந்த வேலைநிறுத்தம் காரணமாக பல ரயில் நிலையங்கள் செயல்பாடற்றுக் காணப்படுகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.*

*இதேவேளை, கடலோர ரயில் பாதையின் காலி மற்றும் மாத்தறையிலிருந்து பயணித்த இரண்டு ரயில் நேற்றுக் காலை கோட்டை ரயில் நிலையத்தைச் சென்றடைந்தன. (ஐ)*





யாழ்ப்பாணம் குருநகர் குருசோ வீதியையும் மத்தியூஸ் வீதியையும் இணைக்கும் பாதையை சீரமைத்துத் தருமாறு கிறீன் பில்ட் சனசமூக நிலையம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக யாழ் மாநகர சபையினால் உலக வங்கி நிதி உதவியுடன் புனரமைக்கப்பட்டு, யாழ். மாநகர மேயர் இம்மானுவேல் ஆனல்ட் அதனைத் திறந்து வைத்தார். கிறீன் பீல்ட் செயலாளர் தி.மைக்கல் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் மாநகர சபை பொறியியலாளர் ஐ.சி.டி.பி. திட்ட பொறியியலாளர், மாநகர சபை உறுப்பினர், பேராலயப் பங்குத் தந்தை அருள்பணி சி.எக்ஸ்.நேசராச அடிகளார் உள்பட பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## தீவகத்தில் இருந்து கற்றாழை கடத்த முயன்ற இருவர் கைது

வேலணைப்பகுதியில் கற்றாழை பிடுங்கி, அதனைக் கடத்த முற்பட்ட இருவரை ஊர்காவற்றுறைப் பொலிஸார் நேற்று வியாழக்கிழமை கைது செய்தனர்.

வேலணை வெள்ளைக் கடற்கரையை (சாட்டி) அண்டிய பகுதிகளில் கற்றாழைகளைப் பிடுங்கிய இருவர் அதனைக் கடத்திச் செல்கிறனர் எனப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது.

தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்கு ஊர்காற்றுறை பொலிஸ் நிலைய உபபொலிஸ் பரிசோதகர் விவேகானந்தராஜ் தலைமையில் சென்ற பொலிஸார், கற்றாழை கடத்திய இருவரைக் கைது செய்துடன், அவர்கள் கடத்திச் சென்ற 2 ஆயிரம் கற்றாழைகளையும் பறிமுதல் செய்தனர். அத்துடன் கற்றாளைக் கடத்த பயன்படுத்திய பட்டா ரக வாகனத்தையும் பொலிஸார் தடுத்து வைத்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களைக் கைப்பற்றப்பட்ட வாகனம் மற்றும் கற்றாழையுடன் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

## பொரளையில் தீ விபத்து

பொரளை, காதர்னானவத்தைப் பிரதேசத்தில் நேற்று அதிகாலை திடீர் தீ விபத்து ஏற்பட்டது.

நேற்று அதிகாலை 02.30 மணியளவில் ஏற்பட்ட இந்தத் தீ விபத்தில் 141ஆவது பிரிவில் உள்ள 04 தற்காலிக வீடுகள் சேதமடைந்தன.

பொலிஸார், பிரதேசவாசிகள் மற்றும் கொழும்பு மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவினர் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இந்தத் தீயினால் உயிரிழப்புக்கள் எதுவும் ஏற்படவில்லை. தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. (ஐ)

## இலவச வழிகாட்டல் வகுப்புக்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 22

முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் II இற்கான வினைத் திறமைகாண் தடைப் பரீட்சைக்குரிய இலவச வழிகாட்டல் வகுப்புக்கள் இன்று சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ்ப்பாண வலயக்கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

விண்ணப்பித்த சகல முகாமைத்துவ உதவியாளர்களையும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு பொது முகாமைத்துவ உதவியாளர் சேவைச் சங்கத்தின் செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (இ

## ஆலய மகோற்சவம் திங்கள் கொடியுடன்

யாழ்ப்பாணம், ஜூன் 22

யாழ்ப்பாணம் – வண்ணை வடகிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தான மகோற்சவம் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. எதிர்வரும் 6 ஆம் திகதி மாலை சப்பற உற்சவமும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு இரதோற்சவமும், திங்கட்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்த உற்சவமும் நடைபெறும்.

தினமும் காலை 8.00 மணிக்கு அபிஷேகம், 10.30 மணிக்கு வசந்த மண்டப பூஜை, மாலை 4.00 மணிக்கு அபிஷேகம் இரவு 6.30 மணிக்கு வசந்தமண்டப பூஜை என்பன நடைபெறும். (இ

காலைக்கதிர் Kalaikathir



# இலங்கைக்கும் இந்தியாவுக்கும் ஐ.எஸ். தாக்குதல் அச்சுறுத்தல்

## இந்திய உளவுப் பிரிவு எச்சரிக்கை

**புதுடில்லி, ஜுன் 22 இலங்கைக்கும் இந்தியாவுக்கும் ஐ.எஸ். பயங்கரவாதத் தாக்குதல் அச்சுறுத்தல் இருப்பதாக இந்திய உளவுப் பிரிவான றோ மீண்டும் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

**இந்திய உளவுப்பிரிவான றோ இதுகுறித்த மூன்று எச்சரிக்கைக் கடிதங்களை இந்திய உயர்மட்டப் பாதுகாப்புத் தரப்புகளுக்கு அனுப்பி வைத்திருப்பதாக அந் நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**

ஈராக் மற்றும் சிரியா ஆகிய நாடுகளை மையப்படுத்தி இஸ்லாமிய தேசத்தை பிரகடனப்படுத்தி செயற்பட்டு வந்த ஐ.எஸ். தீவிரவாத அமைப்பின் கட்டுப்பாட்டில் இருந்த நிலப்பிரதேசங்கள் முற்றாக இல்லாது போயுள்ள நிலையில் அந்த அமைப்பு இந்து சமுத்திர நாடுகளை நோக்கி நகர்ந்துள்ளதாக இந்திய உளவுத்துறை தெரிவித்துள்ளது.

இதற்கமைய இந்தியாவின் கேரளா, தமிழ்நாடு மற்றும் ஆந்திர மாநிலங்களின் பொலிஸ் உயர்மட்ட அதிகாரிகளுக்கு றோ உளவுத்துறை அனுப்பி வைத்திருக்கும் எச்சரிக்கைக் கடிதங்களில் இந்தியாவில் தாக்குதல்கள் மேற்கொள்ளக் கூடிய இடங்கள் தொடர்பான தகவல்களையும் தெளிவுபடுத்தியிருக்கின்றது.

கேரளாவிலிருந்து சுமார் 100 பேர் வரை ஐ.எஸ் தீவிரவாதிகளுடன் கடந்த குறுகிய காலப்பகுதிக்குள் இணைந்திருக்கின்றனர் எனவும், முப்பதுக்கும் அதிகமான நபர்கள் வெவ்வேறு அமைப்புக்களுடன் கேரளா பகுதியில் தொடர்பு வைத்திருக்கின்றனர் எனவும் றோ கூறியுள்ளது.

இந்த நிலையில் இந்தியாவின் கடல் எல்லைப் பகுதிகளிலும், அதேபோல பல இடங்களிலும் தற்போது பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருக்கின்றன.





இதேவேளை இந்த எச்சரிக்கை குறித்து இலங்கையின் தேசிய புலனாய்வுப் பிரிவின் அதிகாரி ஒருவரிடம் வினவியபோது, றோ உளவுப் பிரிவின் இந்த எச்சரிக்கை குறித்து தங்களுக்கு இது வரை தெரியப்படுத்தப்படவில்லை என்று பதிலளித்தார்.

எவ்வாறாயினும் இலங்கையில் உயிர்த்த ஞாயிறு தினத்தில் இடம்பெற்ற தாக்குதல்களுக்குப் பின்னர் பாதுகாப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வந்த சுற்றிவளைப்புக்கள், சோதனைகள், கைதுகள் உள்ளிட்ட பாதுகாப்பு கெடுபிடிகள் தற்போது தளர்த்தப்பட்டுள்ளன.

இதுவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட முஸ்லிம்களில் நூற்றுக்கும் அதிகமானவர்கள் தொடர்ந்தும் பயங்கரவாத விசாரணைப் பிரிவு மற்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

அதேவேளை மேலும் பலர் உள்ளூர் பொலிஸ் நிலையங்களிலும், நீதிமன்றங்களிலும் முன்னிலைப்படுத்தப்பட்டு விளக்கமறியல்களிலும் வைக்கப்பட்டுள்ளனர். (உ)

# பெண்கள் சபரிமலை கோயிலுக்குள்ளே நுழைகின்றமையை தடுப்பதற்குச் சட்டம்!

## தனிநபர் பிரேரணையாக நாடாளுமன்றுக்கு வருகிறது



சபரிமலை ஐயப்பன் கோவிலில் பெண்களுக்கு தடை விதிக்க வகை செய்யும் பிரேரணயை கேரளாவைச் சேர்ந்த எம்.பி. ஒருவர் நேற்று இந்திய நாடாளுமன்றத்தில் கொண்டு வர இருந்தார்.

சபரிமலை ஐயப்பன் கோவிலுக்குள் சென்று வழிபடுவதற்கு, 10 வயது முதல் 50 வயது வரை உள்ள பெண்களுக்கு அனுமதி வழங்கப்படுவதில்லை.

இந்தப் பாரம்பரிய வழக்கத்திற்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம், சபரிமலை ஐயப்பன் கோவிலில் அனைத்து வயதுடைய பெண்களையும் அனுமதிக்கும்படி தீர்ப்பு வழங்கியது. ஆனால், பெண்களை சபரிமலைக்கு செல்ல விடாமல் போராட்டக்காரர்கள் தடுத்து நிறுத்திப் போராடியதால், தீர்ப்பை நடைமுறைப்படுத்துவதில் அரசுக்கு கடும் சிக்கல் ஏற்பட்டது.

இந்நிலையில், சபரிமலையில் 10 வயது முதல் 50 வயது வரையுள்ள பெண்களை அனுமதிக்க தடை விதிக்க வகை செய்யும் தனி நபர் பிரேரணை, நாடாளுமன்றத்தில் நேற்றுச் சமர்ப்பிக்கப்பட இருந்தது. கேரளாவைச் சேர்ந்த புரட்சிகர சோசலிஸ்ட் கட்சி எம்.பியான பிரேமச் சந்திரன் (கொல்லம்) இந்தப் பிரேரணையைத் தாக்கல் செய்ய இருந்தார். சபரிமலை விவகாரத்தில் 2018, செப்ரெம்பர் முதலாம் திகதிக்கு முன்பிருந்த நிலை தொடரவேண்டும் எனத் தமது பிரேரணையில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பக்தர்கள் இறக்கிய தலைமுடியின் ஏலத்தால் திருப்பதிக்கு இம்மாதம் ஏழரைக் கோடி ரூபா!

திருப்பதி ஏழுமலையானுக்கு பக்தர்கள் காணிக்கையாக செலுத்திய தலைமுடி ஏலத்தின் மூலம் தேவஸ்தானத்திற்கு 7 கோடியே 45 லட்சம் ரூபாய் வருவாய் கிடைத்துள்ளது.


திருப்பதி ஏழுமலையானுக்கு பக்தர்கள் நேர்த்திக் கடனாகத் தங்கள் தலைமுடியை காணிக்கையாக செலுத்துவது ஐதீகம். தினமும் சுமார் 30 முதல் 40 ஆயிரம் பக்தர்கள் தலைமுடி காணிக்கை செலுத்தி வருகின்றனர்.



இந்தத்தலைமுடி தரம் வாரியாக பிரிக்கப்பட்டு இ-டெண்டர் மூலம் ஒவ்வொரு மாதமும் முதல் வியாழக்கிழமை ஏலம் விடப்படுகிறது. இதன்படி நேற்று முன்தினம் 3 ஆயிரத்து 800 கிலோ தலைமுடி ஏலம் விடப்பட்டதில் திருமலை திருப்பதி தேவஸ்தானத்திற்கு 7 கோடியே 45 லட்சம் ரூபாய் வருவாய் கிடைத்துள்ளது.

## அருணாச்சலப் பிரதேச மலைமுகட்டில்

# வீழ்ந்து நொறுங்கிய விமானத்தில் இருந்த 13 பேரின் உடல்களும் மீட்பு



அஸ்ஸாமில் இருந்து கடந்த ஜுன் 3 ஆம் திகதி புறப்பட்ட அருணாசலத்தில் சீன எல்லை அருகே மலைகளின் நடுவே விழுந்து நொறுங்கிய ஏ.என். 32 விமானத்தில் இருந்த 13 பேரின் உடல்களும் மீட்கப்பட்டுள்ளன.

இதில் 6 பேரின் உடல்கள் மட்டுமே அடையாளம் காணப் பட்டுள்ளன. இதர 7 பேரின் உடல்கள் உருக்குலைந்து பல பாகங்களாகச் சிதறிப்போயிருக்கின்றன என மீட்புக் குழுவினர் தெரிவித்தனர். கடந்த வாரம் விமானப்படை விமானம் விழுந்த இடம் தெரிய வந்ததும் மலையேற்ற வீரர்கள் உள்ளிட்ட மீட்புக் குழுவினர் ஹெலிக் கொப்டர்கள் மூலம் மலைப் பகுதிகளில் இறக்கி விடப்பட்டனர். மழை காரணமாக 2 முறை மீட்பு முயற்சிகள் தோல்வியடைந்த நிலையில் 12 ஆயிரம் அடி உயரமுடைய மலைப்பகுதியில் சிக்கியிருந்த உடல்களையும் விமானத்தின் பாகங்களையும் மீட்புக் குழுவினர் நேற்று மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட 6 உடல்கள் வேறு விமானப்படைத் தளத்துக்குக் கொண்டு வந்து சேர்க்கப்பட்டன. அவை உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என்று விமானப் படை அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த விமானத்தில் இருந்த குரல் பதிவுக் கருவியும் கறுப்புப் பெட்டியும் மீட்கப்பட்டு விட்டன என்று ஏற்கனவே செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# விமான விபத்தில் உயிரிழந்தோருக்கு பாதுகாப்பு அமைச்சர் நேரில் அஞ்சலி

அருணாச்சலில் விமானப்படை விமான விபத்தில் சிக்கி உயிரிழந்த தமிழக வீரர் உட்பட 13 பேரின் உடல்களுக்கும் இந்தியப் பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத்சிங் மரியாதை செலுத்தினார்.

கடந்த 3 ஆம் திகதி இந்திய விமானப் படையைச் சேர்ந்த 13 வீரர்கள் பயணித்த ஏ.என். 32 ரக போர் விமானம் அருணாச்சலில் விபத்துக்குள்ளானதில் அனைவரும் உயிரிழந்தனர்.

மோசமான வானிலையால் 17 நாள்களுக்குப் பின் நேற்று முன்தினம் 13 பேரின் சடலங்களும் மீட்கப்பட்டன.

இதில் தமிழகத்தின் கோவை மாவட்டத்தைச் சேர்ந்த வீரர் ஹரிஹரனும் ஒருவராவார். நேற்று அதிகாலை டெல்லி விமான நிலையத்துக்குக் கொண்டு வரப்பட்ட அவர்களது உடல்களுக்கு பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் மரியாதை செலுத்தினார்.

இதனை அடுத்து நாட்டுக்காக உயிர் தியாகம் செய்த வீரர்களின் சடலங்களும் அவரவர் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்படுவதற்காக அவர்களது சொந்த ஊர்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டன.



காலைக்கதிர் Kalaikathir



# ஈரான் இழைத்தது மிகப் பெரிய தவறு!

*சீறுகிறார் டிரம்ப்*

வொஷிங்டன்,ஜுன்22

ஈரானின் வான்பரப்பில் அத்துமீறி நுழைந்த அமெரிக்க உளவு விமானத்தை ஈரான் சுட்டு வீழ்த்தியது. இதனால் இரு நாடுகளுக்கு இடையே போர் பதற்றம் உருவாகி உள்ளது.



இந்தச் சம்பவத்துக்கு அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் கடும் கண்டனம் தெரிவித்து உள்ளார். தங்கள் உளவு விமானத்தை சுட்டு வீழ்த்தியதன் மூலம் ஈரான் மிகப்பெரும் தவறு இழைத்து விட்டதாக அவர் தனது டுவிட்டர் தளத்தில் கூறியுள்ளார்.

## போலிச் செய்திகள் வாட்ஸ் அப்பில் பரப்புவோரைக் கண்டறிய முயற்சி!

போலிச் செய்திகள் வாட்ஸ் அப்பில் பரப்பும் நபர் யார் என்பதை அறிய அனைத்து மெசேஜ்களுக்கும் டிஜிட்டல் கைரேகை பதிவை அவசியப்படுத்தலாம் என மத்திய அரசு வாட்ஸ்அப் நிறுவனத்திடம் கோரியுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

வாட்ஸ் அப் கொண்டு வந்த எண்ட் டு எண்ட் என் கிரிப்சன் முறையால், யார் முதலில் போலிச் செய்திகளைப் பரப்புகிறார்கள் எனக் கண்டறிவதிலும் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

எனவே'எண்ட்டுஎண்ட் என்க்ரிப்சனை' நீக்காமல் அனைத்துசெய்திகளுக்கும் டிஜிட்டல் கைரேகை பதிவதன் மூலம் முதலில் ஒரு செய்தியைப் பரப்பியவர் யார் எனக் கண்டறியலாம் என மத்திய அரசு கோரியுள்ள நிலையில், இதில் நடைமுறைச் சாத்தியம் குறைவு என்று வாட்ஸ்அப் தரப்பில் கூறப்படுகிறது.

(உ)

## வட கொரியாவில் சீன அதிபர் ஜின்பிங்



பியாங்யாங்,ஜுன்22

சீன அதிபர் ஜின்பிங் இரு நாள்கள் பயணமாக வடகொரியாவுக்கு சென்று உள்ளார்.

வட கொரியாவின் முக்கிய வர்த்தகக் கூட்டாளியாக சீனா விளங்குகிறது. பல ஆண்டுகளாக இருநாடுகளும் நல்லுறவைப் பேணி வருகின்றன. வடகொரியத் தலைவர் கிம் ஜாங் அன், நான்கு முறை சீனாவுக்கு சென்று அதிபர் ஜின் பிங்கை சந்தித்துள்ளார். இந்த நிலையில், சீனத் தலைவர் ஒருவர் வட கொரியாவுக்கு பயணம் மேற்கொள்வது கடந்த 14 வருடங்களில் இதுதான் முதல்முறை. 2012 ஆம் ஆண்டு அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஜின்பிங் வட கொரியாவுக்கு பயணம் செய்வதும் இதுவே முதல்முறையாகும்.

இந்த பயணத்தின்போது கிம் ஜாங் அன்னை சந்தித்து பேசும் ஜின்பிங் நிறுத்தி வைக்கப்பட்ட வட கொரியாவின் அணு ஆயுதத் திட்டம் குறித்தும், பொருளாதார பிரச்சினைகள் குறித்தும் ஆலோசனை நடத்துவார் என தெரிகிறது. அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் உடனான கிம் ஜாங் அன்னின் இரண்டாவது சந்திப்பு தோல்வியில் முடிந்ததால், சற்று தடுமாறியிருந்த கிம் ஜான் அன்னுக்கு உத்வேகமளிக்கக்கூடிய ஒரு சந்திப்பாக இது அமையும் என சர்வதேச நோக்கர்கள் கருதுகின்றனர்.

# அமெ. உளவு விமானத்தை சுட்டு வீழ்த்தியது ஈரான்!

## மத்திய கிழக்கில் போர்ப் பதற்ற நிலை

**தங்கள் வான்பரப்பில் அத்துமீறி நுழைந்ததாகத் தெரிவித்து அமெரிக்காவின் ஆளில்லா உளவு விமானத்தை ஈரான் சுட்டு வீழ்த்தியுள்ளது.**

**இதனால் மத்திய கிழக்கில் பெரும் போர்ப் பதற்றம் ஏற்பட்டுள்ளது.**

**ஈரான், வல்லரசு நாடுகளுடன் 2015 ஆம் ஆண்டு அணு ஆயுதத் தவிர்ப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டது. வரலாற்று சிறப்புமிக்க ஒப்பந்தம் எனக் கருதப்பட்ட அந்த ஒப்பந்தம், ஈரானின் அணு ஆயுத செயல்பாடுகளை கட்டுக்குள் கொண்டு வரவும், அதற்கு ஏற்ப அந்த நாட்டின்மீது அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் விதித்துள்ள பொருளாதார தடைகளை திரும்பப் பெறவும் வழிவகுத்தது.**




ஒபாமா காலத்தில் செய்யப்பட்ட இந்த ஒப்பந்தம், அமெரிக்காவின் தற்போதைய ஜனாதிபதி டிரம்புக்கு பிடிக்கவில்லை. இதில் அமெரிக்க நலன் கருத்தில் கொள்ளப்படவில்லை என்பது அவரது கருத்து. இதன் காரணமாக கடந்த ஆண்டு திடீரென இந்த ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா விலகிக்கொள்வதாக டிரம்ப் அதிரடியாக அறிவித்தார். இது அமெரிக்காவுக்கும், ஈரானுக்கும் இடையே பிரச்சினையை ஏற்படுத்தியது. ஈரான் படையை கறுப்பு பட்டியலில் அமெரிக்கா சேர்த்தது.




அமெரிக்கா விதித்த பொருளாதார தடைகள் ஈரானின் பொருளாதாரத்தை பின்னுக்குச் செல்ல வைத்தன. இதுவரை இல்லாத வகையில் ஈரான் நாணய மதிப்பு சரிவைச் சந்தித்தது. இதனால் வெளிநாட்டு முதலீடுகள் பாதித்தன.

ஈரானை புதிய ஒப்பந்தம் போட வைக்க வேண்டும், அந்த ஒப்பந்தம் அணு ஆயுதங்கள் மட்டுமின்றி கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளையும் கட்டுப்படுத்தும் வகையில் அமைய வேண்டும் என்று அமெரிக்கா கணக்குப் போடுகிறது.

ஈரானும் பதிலுக்கு மிரட்டல் விடுத்து வருகிறது. குறிப்பாக ஹொர்முஸ் ஜலசந்தியில் தடையை ஏற்படுத்தி விடுவோம் என்கிறது ஈரான். இது உலகளாவிய எண்ணெய் போக்குவரத்துக்குப் பெரும் தடைச்சுவராக அமைந்து விடும்.

இந்த நிலையில், ஈரான் மீது கண் வைத்து அமெரிக்கா போர்க்கப்பல்களையும், போர் விமானங்களையும், தளபாடங்களையும் மத்திய கிழக்குக்கு நகர்த்தியது.

அண்மையில் ஓமன் வளைகுடாவில் 2 எண்ணெய் கப்பல்கள் மீது கண்ணிவெடித் தாக்குதல் நடத்தப்பட்டதற்கு ஈரான்தான் காரணம் எனக்கூறி மத்திய கிழக்கு பிராந்தியத்துக்கு கூடுதலாக ஆயிரம் இராணுவ வீரர்களை அமெரிக்கா அனுப்பி வைத்தது. இதனால் ஆத்திரம் அடைந்துள்ள ஈரான், அணுசக்தி ஒப்பந்தத்தை மீறி யுரேனியத்தை செறிவூட்டும் பணிகள் விரைவில் தொடங்கும் எனப் பகிரங்கமாக அறிவித்துள்ளது.

இதனால் ஈரான் அணு ஆயுதங்களை தயாரிக்கும் என்று அச்சம் எழுந்துள்ளது. இதன் காரணமாக அமெரிக்கா – ஈரான் இடையே நாளுக்கு நாள் பதற்றம் அதிகரித்து வருகிறது. இந்த நிலையில் தங்கள் நாட்டின் தெற்கு பகுதியில் உள்ள ஹோர்மஸ்கான் வான்பரப்பில் அனுமதியின்றி நுழைந்த அமெரிக்காவின் ஆளில்லா உளவு விமானத்தை சுட்டு வீழ்த்தியதாக ஈரான் தெரிவித்துள்ளது.

ஆளில்லா உளவு விமானத்தை சுட்டு வீழ்த்தியதன் மூலம் எந்தவொரு ஆக்கிரமிப்புக்கும் எதி ராக நாங்கள் கடுமையாக செயல்படுவோம் என்ற தெளிவான செய் தியை அமெரிக்காவுக்கு தெரியப்படுத்தி உள்ளோம். ஈரான் எந்த நாட்டுடனும் போரை விரும்பவில்லை. ஆனால் ஈரானைப் பாதுகாக்க நாங்கள் முழுமையாக தயாராக இருக்கிறோம் – எனக் கூறியுள்ளது.

தங்கள் நாட்டு ஆளில்லா விமானம் சுட்டுவீழ்த்தப் பட்டதை அமெரிக்கா உறுதி செய்துள்ளது. ஆனால் விமானம் ஈரானின் வான்பரப்பில் நுழையவில்லை, சர்வதேச நீர்பரப்புக்கு மேலே பறந்ததாகவும் அமெரிக்கா கூறியுள்ளது. இதனால் பதற்றம் மேலும் அதிகரித்துள்ளது.

அதி உச்ச உயரத்தில், தொடர்ந்து நீண்ட நேரம் பறக்கக் கூடிய விசேட ஏற்பாடுகளைக் கொண்ட, மிகத் துல்லியமாகத் தரை நகர்வுகளை நோட்டமிட்டு தகவல்களை அனுப்பக்கூடிய அதி நவீன கருவிகள் மற்றும் சாதனங்கள் பொருத்தப்பட்ட 'ஆர்.கியூ.–4 குளோபல் ஹவாக்' ரக உளவு விமானமே சுட்டு வீழ்த்தப்பட்டது.

இந்த விமானமும் அதில் பொருத்தப்பட்டுள்ள உணர் கருவிகளும் சேர்ந்து இருபது கோடி அமெரிக்க டொலருக்கு (இலங்கை நாணயத்தில் சுமார் 3 ஆயிரத்து 500 கோடி ரூபாவும்) விற்பனையாகின்றன என இராணுவ சஞ்சிகைகள் தகவல் வெளியிட்டுள்ளன.

# இறந்த மூன்று யானைகளின் உடல்களை தின்ற ஐந்நூறு கழுகுகள் மர்மமாக சாவு

## ஆபிரிக்க பொட்ஸ்வானா நாட்டில் சம்பவம்



கபோரோன்,ஜுன்22

ஆபிரிக்காவில் இறந்த மூன்று யானைகளின் சடலங்களை தின்றதால் ஐந்நூறுக்கும் மேற்பட்ட கழுகுகள் மர்மமான முறையில் உயிரிழந்தன.

ஆபிரிக்காவின் பொட்ஸ்வானா பகுதியில் வேட்டையாடப்பட்ட 3 யானைகள் இறந்து கிடந்துள்ளன. இந்த யானைகளின் சடலங்களை ஐந்நூறுக்கும் மேற்பட்ட கழுகுகள் உண்டன.

இதில் 537 கழுகுகள் உயிரிழந்துள்ளன. பொதுவாக உயிரினங்கள், விலங்குகள் ஆகியவற்றின் சடலங்களை கழுகுகள் உண்பது வழக்கம். ஆனால், இந்த யானைகளின் சடலங்களை தின்ற கழுகுகள் மர்மமான முறையில் இறந்துள்ளன.

இதற்கான காரணம் குறித்து வனத்துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், 'வேட்டையாடப்பட்ட மூன்று யானைகளின் சடலங்களில் நச்சுத்தன்மை கலந்துள்ளது. இதனை உண்ட கழுகுகள் உயிரிழந்தன' எனக் கூறியுள்ளார்.



இறந்தகழுகுகளுள் 468 கழுகுகள் வெள்ளை நிறம் கொண்டவை. இந்த கழுகுகள் மிக மோசமான, ஆபத்து ஏற்படுத்தும் பறவை இனங்களில் ஒன்றாக சர்வதேச இயற்கை பாதுகாப்பு ஒன்றியத்தின் பட்டியலில் இடம் பெற்றுள்ளன.

மேலும் இவற்றுள் 2 கழுகுகள் 'டவினி' எனப்படும் அரிய வகை கழுகுகளாகும். அவையும் பரிதாபமாக உயிரிழந்துள்ளன. இறந்த யானைகளின் சடலங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இவ்விடயம் குறித்து அந்நாட்டு வனத்துறை தீவிர விசாரணை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர்
Kalaikathir



**வாரத்துக்கு ஒரு கேள்வி வரிசையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை 'மகாவலித் திட்டம்' தொடர்பான ஒரு கேள்விக்கு வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான க.வி.விக்னேஸ்வரன் பதிலளித்துள்ளார். அவரின் பதில் இங்கு வெளிவந்துள்ளது.**



## மகாவலித் திட்டத்தால் எமக்கு காத்திருக்கிறது பெரும் கேடு

# இனியாவது தமிழ் மக்களின் பிரதிநிதிகள் இனப்பற்றுடன் செயற்பட வேண்டும்!

**கேள்வி:** மகாவலி திட்டத்தால் வட கிழக்கு மக்களுக்கு தீமையே ஒழிய நன்மை எதுவும் கிடைக்கவில்லை என்று பொருள்பட நீங்கள் தெரிவித்துள்ளீர்கள். அதன் அர்த்தம் என்ன?

**பதில்:** இலங்கை 1948 ஆம் ஆண்டு சுதந்திரம் அடைந்த பின்னர் வடக்கு கிழக்கில் அபிவிருத்தி என்ற போர்வையில் துரிதமாக மேற்கொள்ளப்பட்ட குடியேற்றத் திட்டங்களின் பின்னணியில் மூன்று பிரதான காரணங்கள் இருந்திருக்கின்றன. அவற்றை எம் மக்கள் புரிந்தும் புரியாது வாழ்ந்து வந்துள்ளனர். அவையாவன–

1.தமிழ் பேசும் மக்கள் வாழ்ந்த வடக்கு, கிழக்கின் நில அபகரிப்பு.

2.வடக்கு, கிழக்கில் குடிசன பரம்பலில் மாற்றத்தை ஏற்படுத்துதல்.

3.தமிழ் மக்களின் தாயக கோட்பாட்டை சிதைக்கும் வகையில் வடக்கும் கிழக்கும் இணைந்த தமிழ் மக்களின் தொடர்ச்சியான நிலப் பரப்பை குறுக்கே சிங்கள மக்களை நுழைத்து குடியேறச்செய்து துண்டாடுதல்.

இவற்றை ஓரளவு புரிந்து கொண்ட தமிழ் அரசியல் தலைவர்களின் கடும் எதிர்ப்பு மற்றும் போராட்டங்களை கருத்தில் கொள்ளாமல் அரசாங்கங்கள் மேற்கொண்ட இத்தகைய திட்டமிட்ட குடியேற்ற நடவடிக்கைகள் எம்மவர்கள் அஞ்சிய படியே பாரிய விளைவுகளை தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்தின. இதே போலத்தான் தற்போதும் மகாவலி திட்டத்துக்கு ஊடாக மேற்கொள்ளப்பட்டுவரும் குடியேற்ற நடவடிக்கைகள் வடக்கில் தமிழ் மக்களின் குடிசன பரம்பலில் செயற்கையான மாற்றத்தை ஏற்படுத்தப்போவதுடன் மிக விரைவில் எமது தாயகமான வடக்கும் கிழக்கும் துண்டாடப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

கடந்த காலங்களைப்போலவே எமது போராட்டங்கள் ஒருபுறம் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கஇந்த திட்டமிட்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் எந்த வித பாதிப்பும் இன்றி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவ்வாறு தொடர்ந்து நடைபெறும் வகையில் நாம் விட்டுக் கொடுத்துக் கொண்டிருக்க முடியாது.

ஏனென்றால், எந்த சிங்கள கட்சி ஆட்சிக்கு வந்தாலும், எமது தாயகத்தை ஆக்கிரமித்து பௌத்த சிங்கள மயமாக்கும் அவர்களின் திட்டம் தொடர்ந்து கொண்டுதான் இருக்கப்போகின்றது. மாறி மாறி ஆட்சிக்கு வரும் இரு பிரதான கட்சிகளுமே, தமிழ் மக்களின் இருப்பை அழிக்கும் செயற்பாடுகளில் ஏட்டிக்குப் போட்டியாகவே செயற்பட்டு வந்திருக்கின்றமை வரலாறு.

ஒரு கட்சி மலைப்பாம்பு என்றால், மற்றைய கட்சி விஷப்பாம்பு என்பதே யதார்த்தம். ஒன்று விழுங்கும். மற்றையது நின்று கொல்லும்.

கடந்த 5 வருடங்களில் நல்லாட்சி என்ற முகமூடி அணிந்த இந்த இரண்டு பாம்புகளும் ஒன்று சேர்ந்த ஆட்சியில் தான் ஆயிரக்கணக்கான எமது நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. வடக்கில் ஒரு சில இடங்களில் இராணுவத்தை பொது மக்களின் காணிகளில் இருந்து வெளியேற்றிவிட்டு ஆயிரக்கணக்காண எமது காணிகள் கபளீகரம் செய்யப்பட்டு வருகின்றன.

கடந்த சில வருடங்களில் மகாவலி திட்டம் மூலம் வவுனியா, முல்லைத்தீவு மற்றும் ஏனைய பகுதிகளில் அபிவிருத்தி என்ற போர்வையில் நில அபகரிப்பும் சிங்கள குடியேற்றத் திட்டங்களும் முனைப்படைந்து வந்திருக்கின்றன. அதேவேளை, வன திணைக்களம் மற்றும் தொல்லியல் திணைக்களம் போன்றவை திட்டமிட்ட குடியேற்றங்களுக்கும் நில அபகரிப்புக்களுக்கும் துணைபோகும் வகையில் செயற்பட்டு வந்துள்ளன.

பௌத்தர்கள் இல்லாத இடங்களில் பௌத்த விகாரைகள் தொடர்ந்து அமைக்கப்பட்டு வருகின்றன. பொதுமக்களின் காணிகளை அபகரித்து அவற்றில் இராணுவம் வியாபாரம் மற்றும் விவசாயம் ஆகியவற்றில் ஈடுபடுவது தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கின்றன. கடல் பிரதேசங்களில் கடற்படையினரின் ஆக்கிரமிப்புக்கள் நடைபெற்று வருகின்றன. உள்ளூர் மீனவர்களின் மீனவ வாழ்க்கை பாதிப்புக்கு ஆளாகி வருகின்றது.

முல்லைத்தீவு மாவட்ட செயலக 2019 ஆம் ஆண்டு புள்ளிவிவரங்களின்படி, முல்லைத்தீவு மாவட்டத்தில் 679 ஏக்கர் தனியார் காணிகளும் 3178 ஏக்கர் அரச காணிகளும் படையினர் வசம் உள்ளன. ஆனால் மேலதிகமாக பல ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகளை இராணுவம் தனது முகாம்களுக்காகவும் குடியிருப்புக்களுக்காகவும் கைவசப்படுத்தி வைத்திருக்கிறது என்று அறியமுடிகின்றது. இவை கணக்கில் சேர்க்கப்படவில்லை.

உதாரணத்திற்கு திருமுருகண்டி கோவிலின் முன்னிருக்கும் A9 வீதியின் அடுத்த பக்கத்தில் 1702 ஏக்கர் காணி இராணுவத்தினரிடம் இருந்து வருகின்றது. அது பற்றி கணக்கில்லை.

2017 ஆம் ஆண்டு அடையாளம் ஆய்வு நிலையம் மேற்கொண்ட ஓர் ஆய்வில் 30,000 ஏக்கர் காணி மட்டில் இராணுவத்தினால் முல்லைத்தீவில் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்றது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் முல்லைத்

**மாறி மாறி ஆட்சிக்கு வரும் இரு பிரதான கட்சிகளுமே, தமிழ் மக்களின் இருப்பை அழிக்கும் செயற்பாடுகளில் ஏட்டிக்குப் போட்டியாகவே செயற்பட்டு வந்திருக்கின்றமை வரலாறு. ஒரு கட்சி மலைப்பாம்பு என்றால், மற்றைய கட்சி விஷப்பாம்பு என்பதே யதார்த்தம். ஒன்று விழுங்கும். மற்றையது நின்று கொல்லும்.**

தீவில் வன இலாகா, தொல்பொருள் ஆராய்ச்சி திணைக்களம், மகாவலி மற்றும் இராணுவம் ஆகியவற்றினால் மொத்தமாக கைவசப்படுத்தப்பட்டுள்ள நில அளவு 80,000 ஏக்கருக்கும் மேல் என்று சொல்லப்படுகின்றது.

அவர்கள் கைவசம் இருக்கும் பல இடங்கள் பற்றி தரவுகள் பெற படையினர் எதிர்ப்பு தெரிவித்தும் பயமுறுத்தியும் வருகின்றனர். ஒரு பௌத்தர் கூட நிரந்தரமாக வாழாத வட்டுவாகலில் பழம்பெரும் ஆலயமான சப்த கன்னிமார் ஆலய வளா கத்தை இராணுவம் இன்று அபகரித்து பௌத்த விகாரை ஒன்றை அமைத்துள்ளது.

அடுத்த உத்தியோகபூர்வ புள்ளி விவரங்களின்படி மன்னார் மாவட்டத்தில் 12,154 ஏக்கர் காணியை வன விலங்குகள் திணைக்களமும், 12,275 ஏக்கர் காணிகளை வன இலாகாவும் கைவசப்படுத்தியுள்ளன. இவை தவிர இராணுவம் மற்றும் தொல்பொருள் ஆராய்ச்சி திணைக்களம் ஆகியனவும் ஆயிரக்கணக்கான ஏக்கர்

## சலுகைகளுக்கு அடிபணியாத நேர்மையான தமிழர் தலைமை உருவாக வேண்டும்!!

காணிகளைத் தம் வசம் வைத்துள்ளன.

முல்லைத்தீவு மற்றும் திருகோணமலை ஆகிய தமிழ் மாவட்டங்களை நில ரீதியாக இணைக்கும் மணலாறு மற்றும் வவு னியா வடக்கு ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் குடியேற்ற திட்டங்கள் மூலம் மிக விரைவில் எமது வடக்கு,கிழக்கு தாயக கோட்பாடு உடைத்தெறியப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இது நடைபெற வசதியளித்த ஒரேயொரு காரணம் என்ன? மகாவலித்திட்டம்! வடக்கு கிழக்குக்குத் தண்ணீர் தரப்போகின்றோம் என்று ஆசைகாட்டி ஒரு சொட்டு மகாவலித் தண்ணீரை இதுவரை தராமலே எமது காணிகளைக் கபளீகரம் செய்து வருகின்றனர். உண்மையில் மகாவலிநீர் வடக்கிற்கு வராது என்பதே தகைமைபெற்ற எமது எந்திரிகளின் கருத்து.

பாரிய மரக்குதிரையை பரிசாகத் தந்து கிரேக்க போர்வீரர்கள் ட்ரோய் நகரத்தினுள் உள்நுழைந்து விட்டனர்! இப்பொழுதுதான் எம்முட் சிலர் விழித்துக் கொண்டுள்ளனர். சவால்களை இனி சமாளிக்க வேண்டிவரும் என்று புதிய கருத்துக்களை ஓட்டப்பந்தயத் திடல்களில் இருந்து கூறி ஒப்பாரி வைக்கின்றனர்.

2016 இல் தீர்வு வரும், 2017ல்தீர்வு வரும், 2018ல்தீர்வு வரும் என்று கூறிய போது வராது என்றோம். எம்மை அரசியல் ரீதியாக அன்று தாக்கியவர்களுக்கு இன்று ஓட்டப்பந்தயத்திடல்களில் திடீர் ஒளியேற்றம் கிடைத்துள்ளது. இப்பொழுது தான் சவால்கள் திடீரென அவர்கள் கண்களுக்குப் புலப்படத் தொடங்கியுள்ளன.

எமது இனம் இன்று மட்டுமல்ல கடந்த 10 வருடங்களாக மிகவும் இக்கட்டான ஒரு நிலையில் நின்று கொண்டிருக்கின்றது. கடந்த 30 வருட கால யுத்தத்தில் இழந்தவற்றை விடவும் எமது இருப்புக்கான அடிப்படைகளை வேகமாக நாம் இந்த பத்து வருடகாலத்தில் இழந்துகொண்டிருக்கின்றோம். எமது அரசியல், சமூக, பொருளாதார அபிலாஷைகளுக்கான அடித்தளங்கள் திட்டமிட்டவகையில் சிதைக்கப்பட்டு வருகின்றன. நிலைமை கட்டுமீறி செல்வதற்கு முன்னர் நாம் சுதாகரித்துக் கொள்ள வேண்டும். மாற்று நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும்.

மறைந்த பொருளியலாளர் வரதராஜன் மேற்கொண்ட ஓர் ஆய்வின்படி, 1901 - 2012 ஆம் (2012 க்கு பின்னர் குடித்தொகை மதிப்பீடு செய்யப்படவில்லை) ஆண்டுகளுக்கு இடையிலான கிழக்கு மாகாண சனத்தொகை மதிப்பீட்டை ஆய்வு செய்கின்ற போது அதன் மொத்த சனத் தொகை 6 மடங்காக அதிகரித்துள்ளது (96,926 to 617,295) என்று காணப்பட்டுள்ளது.

ஒப்பீட்டளவில் சிங்கள மக் களின் சனத்தொகை 41 மடங் கினால் அதிகரித்துள்ளது (8,778 to 359,136). இது கிழக்கு மாகாண குடித் தொகை பரம்பலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. 1901 ஆம் ஆண்டு 55. 8 சத வீதமாக இருந்த தமிழ் மக்களின் சனத்தொகை 2012 ஆம் ஆண்டு 39.7 சதவீதமாக வீழ்ச்சி அடைந்துள்ளது. அதேவேளை, சிங்கள மக்களின் எண்ணிக்கை 1901 இல் 5.1 சத வீதமாக இருந்து 23.2 சதவீதமாக இன்று அதிகரித்துள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில், 1827 ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின்படி 18,000 க்கும் அதிகமான தமிழ் மக்களும் 250 சிங்கள மக்களும் வாழ்ந்துள்ளனர். 1827- 1921 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சிங்கள மக்களின் எண்ணிக்கை மொத்த சனத்தொகையில் 5 சத வீதத்தைக் கூடத்தாண்டவில்லை.

1911 ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டு தகவல்களின்படி, திருகோணமலையின் கட்டுக்குளம் மேற்கு பிரிவின் சில உட் புற கண்டிய கிராமங்களிலேயே சிங்களவர்கள் பெரும்பான்மையாக இருந்துள்ளனர். அவர்களின் எண்ணிக்கை 197 ஆகவே இருந்தது.

திருகோணமலையின் ஏனைய பிரிவுகளான தம்பலகாமம், திருகோணமலை நகரம் மற்றும் கொட்டியார் பற்று ஆகிய இடங்களில் 1911 ஆம் ஆண்டில் 98 சத வீதம் ( 23, 000 க்கும் அதிகம்) தமிழ் பேசும் மக்கள் இருந்துள்ளனர். தம்பலகாமம் பற்று பிரிவில் முஸ்லிம்கள் அதிகளவில் இருந்துள்ளனர்.

இதன் மூலம், திருகோணமலையின் கட்டுகுளம் மேற்கு பிரிவு தவிர, ஏனைய இடங்கள் 19 ஆம் மற்றும் 20 ஆம் நூற்றாண்டுகளின் ஆரம்பத்தில் ஏறத்தாழ முழுமையாக தமிழ் பேசும் மக்களின் இடங்களாகவே இருந்துள்ளன. ஆனால், 1948 ஆம் ஆண்டின் பின்னர் அரசாங்கம் மேற்கொண்ட மூன்று பிரதான நீர்ப்பாசன திட்டங்கள் மூலம் (கந்தளாய் குளம் – 1948, அல்ல குளம்–1953, பதவியா குளம் –1958) சிங்கள மக்கள் கொண்டு வரப்பட்டு இந்த குடிசன பரம்பலில் பாரிய மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சுமார் 50,000 க்கும் அதிகமான தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கள் இந்த நீர்ப்பாசன திட்டங்கள் மூலம் அவற்றின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டு சிங்கள மக்கள் பெரும்பான்மையாக குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

பின்னர் 1961 இல் மொறவெவ (தமிழில் முதலிக் குளம்) என்ற நீர்ப்பாசன திட்டத்தின் மூலம் திருகோணமலை நகரத்துக்கு மேற்காக 24 கிலோ மீற்றர்கள் தொலைவில் மொறவெவ குடியேற்றத் திட்டம் அமைக்கப்பட்டு வேறு இடங்களில் இருந்து சிங்கள மக்கள் கொண்டுவரப்பட்டு குடியமர்த்தப்பட்டனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க...)

# யாழ். பல்கலை ஊழியர்களாக வடக்கைச் சாராத முஸ்லிம்கள்

## நியமனத்தை ஏற்கமுடியாது என்கிறார் சுரேஷ்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூன் 22

வடக்கில் வேலைவாய்ப்பில்லாமல் ஆயிரக்கணக்கான இளைஞர் யுதவதிகள் இருக்கின்றபோது யாழ். பல்கலைக்கழக ஊழியர்கள் நியமனத்தின்போது வடக்குமாகாணத்தைச் சாராத முஸ்லிம்கள் பலர் நியமிக்கப்படுகின்றமையை ஏற்றுக் கொள்ளமுடியாது. முஸ்லிம் அமைச்சர் ஒருவர் உயர்கல்வி அமைச்சராக இருந்து தனது இனம் மற்றும் மதம் சார்ந்து இதனைச் செய்கின்றார் என்றால் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் அவ்வாறு தமிழ் இளைஞர்கள், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பை வழங்குவாரா என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

பருத்தித்துறை வீதி, கட்டப்பிராய் சந்தியிலுள்ள அவரது இல்லத்தில் நேற்று முன் தினம் நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

யாழ். பல்கலைக்கழகத்திற்கு கல்விசாரா ஊழியர்களாக 430 பேர் நியமிக்கப்பட உள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. அதில் 115 பேர் முஸ்லிம் இனத்தைச் சாா்ந்தவர்கள் என்று கூறப்படுகின்றது. குறிப்பாக முஸ்லிம் இனத்தைச் சார்ந்த ஒருவர் உயர்கல்வி அமைச்சராக இருந்தவர்கள் அல்லது இருக்கின்றார் என்றால் அவர் தனது இனம் மற்றும் மதம் சார்ந்து பல்கலைக்கழகத்துக்கு ஆளணிகளை நியமித்திருக்கின்றார்.

அதுவும் வடக்கு மாகாணத்தைச் சாராதவர்களே பெரும்பாலும் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். உண்மையில் வடக்கு மாகாணத்தைச் சார்ந்த பெருமளவிலான இளைஞர், யுவதிகள் வேலைவாய்ப்பில்லாமல் தவிக்கின்றனர். அவர்களுக்கு இந்த வேலைவாய்ப்புக்களை வழங்கியிருக்கலாம். ஆனால் அவ்வாறு செய்யாமல் வெளிமாகாணங்களில் இருந்துகொண்டு வந்த பலரையும் நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

இதனை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமுடியாது. இதற்காக நாங்கள் முஸ்லிம் மக்களுக்கு எதிரானவர்கள் இல்லை. வடக்கிலுள்ள யாழ். பல்கலைக்கழகத்தில் இவ்வாறு வெளியிடங்களில் இருந்த முஸ்லிம்களைக் கொண்டு வந்து நியமிக்கும்போது குறைந்த பட்சம் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் அந்த மாகாணத்தைச் சேர்ந்த தமிழ் மக்களாவது இவ்வாறு நியமிக்கப்படுவார்களா என்ற கேள்வி எழுகின்றது.

இங்கு ஆயிரக்கணக்கானோர் வேலையில்லாமல் இருக்கின்ற நிலையில் இவர்களை ஒதுக்கி விட்டுவெளியில் இருந்து கொண்டு வந்து புகுத்துவது எந்தவிதத்தில் சரியானது. ஆனால் இது தொடர்பில் பேசுவதற்கு தொழிற்சங்கங்களும் இங்குள்ள மக்கள் பிரதிநிதிகளும் தயங்குகின்றனர். ஏனெனில்



இங்குள்ள மக்கள் பிரதிநிதிகள் சிலரும் தமது ஆள்களை இதில் நியமித்திருக்கின்றனர்.

ஆகையினால் இது தொடர்பில் தாம் ஏதும் கதைத்தால் தாம் நியமித்தவர்களுக்கும் வேலையில்லாமல் போய்விடும் என்று கருதுகின்றனர். ஆகவே இங்குள்ள ஒட்டு மொத்த மக்களின் நன்மைக்காக இது தொடர்பில் அவர்கள் குரல் கொடுக்கவேண்டும். ஆகவே இவ்வாறாகப் பெருந்தொகையாக முஸ்லிம் இளைஞர்களைக் கொண்டு வருகின்றமை ஏற்புடையதல்ல – என்றார். (ஐ - 07)

## கடற்படைத் தளபதியுடன் அமெ. அதிகாரி சந்திப்பு



கொழும்பு, ஜூன் 21

கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகப் பாதுகாப்பு ஆலோசகர் லெப்.கேணல் டக்ளஸ் ஹெஸ், இலங்கைக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பியால் டி சில்வாவைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

கடற்படைத் தலைமையகத்தில், கடந்தபுதன்கிழமை இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது, பரஸ்பரம் ஆர்வமுள்ள விடயங்கள் மற்றும் இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டதாகக் கடற்படைத்தலைமையகம் தெரிவித்திருந்தது.

அமெரிக்க இராஜாங்கச் செயலர் மைக் பொம்பியோவின் இலங்கைப் பயணம் ரத்துச் செய்யப்பட்ட சூழலில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

முன்னதாக, மைக் பொம்பியோ, இலங்கைப் பயணத்தின்போது, திருகோணமலைத் துறைமுகத்துக்குச் செல்வதற்கும் திட்டமிட்டிருந்தார் எனத் தகவல்கள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஹல்தும்முல்லை பிரதேச செயலாளர் பொலிஸாரால் கைது

கொழும்பு, ஜூன் 22

வீடொன்றுக்குள் அத்துமீறி நுழைந்து நபரொருவரைத் தாக்கிய குற்றச்சாட்டில், ஹல்தும்முல்லை பிரதேச செயலாளர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

தாக்குதலுக்கு இலக்கான நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

## அஸாத்துக்கு ஹலீம் சவால்

தௌஹீத் ஜமாத் அமைப்புடன்தான் உள்ளிட்டகுடும்ப உறுப்பினர்கள், அலுவலகப்பணியாளர்களுக்குத் தொடர்பு இருக்கின்றமையைமுழுதால் நிரூபிக்குமாறு, மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அஸாத் சாலிக்கு சவால் விடுப்பதாக தபால் சேவைகள், முஸ்லிம் மத அலுவல்கள் அமைச்சர் அப்துல் ஹலீம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். (ஐ)

# வடக்கில் சூறையாடப்படும் தமிழரின் பூர்வீக நிலங்கள்!

### சபையில் சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா சாடல்

கொழும்பு, ஜூன் 22

வனவளத் திணைக்களத்தின் காணி கையகப்படுத்தல் நடவடிக்கை வடக்கு கிழக்கில் தலைவிரித்தாடுகின்றது. போருக்குப்பின்னர், வடக்கில் தமிழர்களின் பூர்வீக நிலங்கள் பல்வேறு பெயர்களினால் சூறையாடப்படுகின்றன எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபன திருத்தச் சட்டவரைவு விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

காணி மீட்டல் என்பது யாரிடமிருந்து யார் காணியை மீட்பது என்ற கேள்வியை வடக்கு, கிழக்கு பகுதியை மையமாகக் கொண்டு கேட்க வேண்டியுள்ளது. ஏனெனில் அங்கு மக்களுக்குச் சொந்தமான



காணிகள் பல்வேறு விதமான அதிகார சபைகளால், திணைக்களங்களால் கையகப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தக் காணிகளை மீட்டல் தொடர்பான ஒரு விவாதத்தை இங்கு முன்வைக்க வேண்டியுள்ளது. பல கோணங்களில் ஆராய்கின்றபோது முதலாவதாக முல்லைத்தீவு மாவட்டத்தின் கேப்பாப்பிலவுக் காணி மீட்டல் ஒரு சர்வதேச புகழ்பெற்ற போராட்டமாகப் பரிணமித்துள்ளது.

இரண்டு வருடங்களுக்கு மேலாக, அந்தக் காணிகளுக்கு உரிய ஆவணங்களை மக்கள் வைத்துக்கொண்டு இராணுவத்திடம் இருந்து தமது காணிகளை மீட்கப் போராடி வருகின்றனர். இந்தக்காணி மீட்டல் இதற்கு பொறுப்பானதாக அமைய வேண்டும். இது குறித்து ஆக்கபூர்வ நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்ட காணிகள் மீட்டல் தொடர்பாகவும் இங்கு கூறவேண்டியுள்ளது. மகாவலி எல் வலய அபிவிருத்தி என்ற போர்வையில் யுத்த காலத்தில் கள்ளத்தனமாக, கபடத்தனமாக வெளியிடப்படட வர்த்தமானிகள் மூலம் எங்கள் மக்களுக்கு சொந்தமான 1000 ஏக்கருக்கு மேற்பட்ட காணிகள் கையகப்படுத்தப்பட்டுள்ளன. மக்கள் பூர்வீகமாக வாழ்ந்த அந்த காணிகளை கையகப்படுத்தி மகாவலி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் சிங்கள மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. இந்தக் காணிகளை மீட்டெடுக்க வேண்டிய போராட்டங்களை நடத்த வேண்டியுள்ளது – என்றார். (ஐ)

# சோபா உடன்பாட்டால் இலங்கை பிளவடையும்

### எச்சரிக்கிறார் உதய கம்மன்பில

கொழும்பு, ஜூன் 22

அமெரிக்காவுடன் சோபா உடன்பாடு, மிலேனியம் சவால் நிறுவனம் போன்ற உடன்பாடுகளை செய்து கொள்வதால், அமெரிக்க – சீனா இடையிலான மோதல்களுக்கான களமாக இலங்கை மாறி விடும் ஆபத்து உள்ளது என்று எச்சரித்திருக்கின்றார் கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில.



கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான மிலேனியம் சவால் நிதிய ஒத்துழைப்பு உடன்பாடு ஒரு பொருளாதாரத் தாழ்வாரத்தை உருவாக்கி விடும்.

அது பனாமா கால்வாயைப் போன்று இலங்கையைப் பிளவுபடுத்தி விடும்.

அமெரிக்காவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முகவர் போன்று சபாநாயகர் கரு ஜயசூரிய செயற்படுகின்றார்.

சபாநாயகருக்கு ஆலோசனை வழங்குவதற்கான ஆலோசகருக்கு, அமெரிக்க நிறுவனம் ஊதியம் வழங்குகிறது. அதனைச் சபாநாயகர் ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

இது, அவருக்கும் அமெரிக்காவுக்கும் இரகசியத் தொடர்பு உள்ளது என்பதை வெளிப்படுத்தியுள்ளது – என்றார். (ஐ)

# விலகினார் ஷிகர் தவான்

இங்கிலாந்து மற்றும் வேல்ஸ்ஸில் தற்போது நடைபெற்று வரும் உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரிலிருந்து, இந்தியக் கிரிக்கெட் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ஷிகர் தவான், முழுமையாக விலகியுள்ளார்.

விரல்உபாதையில்பாதிக்கப்பட்டுள்ளஅவர், குறிப்பிட்ட கால எல்லைக்குள் குணமடைவது கடினம் என்பதால் அவர், இத்தொடரிலிருந்து நீக்கப்பட்டுள்ளார் என இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை விளக்கம் அளித்துள்ளது.

கடந்த 9ஆம் திகதி கெனிங்டன் ஓவல் மைதானத்தில் நடைபெற்ற ஆஸ்திரேலியா அணிக்கெதிரான போட்டியின் போது, ஆஸ்திரேலியா வேகப்பந்து வீச்சாளர் நெதன் குல்டர் நைல் வீசிய பந்து தவானின் இடது சுண்டு விரலில் பலமாக தாக்கியது.

இதனையடுத்து வலியால் துடித்த தவான், மருத்துவர்களை களத்திற்கு அழைத்து



மருத்துவ சிகிச்சை பெற்ற பிறகு மீண்டும் துடுப்பெடுத்தாடினார்.

சிறப்பாக துடுப்பெடுத்தாடிய அவர், 109 பந்துகளை எதிர்கொண்டு 16 பவுண்ரிகள் அடங்கலாக 117 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார். ஆனால், இந்தியா அணி களத்தடுப்பு செய்யும் போது, தவானுக்கு பதிலாக ரவீந்திர ஜடேஜா களத்தடுப்பில் ஈடுபட்டார்.

இதனையடுத்து இப்போட்டியில் இந்தியா அணி 36 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. அத்தோடு இந்திய அணி வெற்றிபெறுவதற்கு துணையாக இருந்த தவானுக்கு ஆட்டநாயகன் விருதும் வழங்கப்பட்டது.

இந்த நிலையில் போட்டியின் பின்னர், விரலில் வீக்கம் இருந்ததால், தவானுக்கு மருத்துவ சோதனை மேற்கொள்ளப்பட்டது. இதில் அவருக்கு காயத்தின் தன்மை மிக மோசமாக இருப்பது கண்டறியப்பட்டது. இதனால் அவரை ஓய்வில் இருக்கும் படி மருத்துவ குழுவினர் அறிவுறுத்தியுள்ளனர்.

இதற்கமைய அவர் முதல் மூன்று வாரங்களுக்கு ஓய்வில் இருப்பார் எனவும், அதன் பின்னர் அவர் அணியில் இணைவார் எனவும் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை அறிவித்திருந்தது.

அத்தோடு, அவருக்கு பதிலாக இளம் விக்கெட் காப்பாளர் ரிஷப் பந்த், அணிக்கு அழைக்கப்பட்டார். எனினும் அவர் விளையாடும் பதினொருவர் அணியில் விளையாடுவது சந்தேகமாகவே இருந்தது.

இந்த நிலையில், இறுதியாக நடைபெற்ற பாகிஸ்தான் அணிக்கெதிரான போட்டியில், ஷிகர் தவானின் ஆரம்ப துடுப்பாட்ட இடத்துக்கு, இதற்கு முன்னைய போட்டிகளில் மத்திய தர வரிசையில் துடுப்பெடுத்தாடிய கே.எல். ராகுல் களமிறக்கப்பட்டார்.

புதிதாக சகலதுறை வீரரான விஜய் சங்கர் அணிக்குள் உள்வாங்கப்பட்டார். இந்த போட்டியில் இருவருமே சிறப்பாக விளையாடினர். இந்தியா அணியும் சிறப்பான வெற்றியை பதிவு செய்தது.

இந்த நிலையில், தற்போது வெளியாகிய அறிவிப்பின்படி, ஷிகர் தவான் உலகக் கிண்ணத் தொடரிலிருந்து முழுமையாக வெளியேறுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக இந்திய கிரிக்கெட் அணியின் முகாமையாளர் சுனில் சுப்ரமணியம் கூறுகையில், 'ஷிகர் தவானின் உபாதை முழுமையாக குணமடைவதற்கு நீண்ட காலம் எடுக்கும் என வைத்திய நிபுணர்கள் அறிவித்ததை தொடர்ந்து, அவர் உலகக் கிண்ண அணியிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளார். அவருக்கு பதிலாக ரிஷப் பந்தை அணியில் இணைப்பதற்கான கோரிக்கை ஐ.சி.சி.க்கு வழங்கப்பட்டுள்ளது' என கூறினார்.

கடந்த போட்டியில் தனக்கு கொடுத்த பொறுப்பினை, விஜய் சங்கர் சிறப்பாக செய்தார். எனினும் ரிப் பந்திற்கு ஐ.சி.சி. விளையாட வாய்ப்பு கொடுத்தால், விஜய் சங்கர் அணியிலிருந்து வெளியேற்றப்படுவார்.

ஷிகர் தவான் 2015ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில், 2 சதங்கள் அடித்திருந்தார். அத்தோடு ஐ.சி.சி. தொடர்களில் மொத்தமாக அவர் 6 சதங்களை அடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



# ஆஸியிடம் போராடி வீழ்ந்தது பங்களாதேஷ்

உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரில், பங்களாதேஷ் அணிக்கெதிரான போட்டியில் ஆஸ்திரேலியா அணி 48 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

நொட்டிங்ஹாம் – ட்ரென்ட் பிரிஜ் மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலியா அணி, முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி களமிறங்கிய ஆஸ்திரேலியா அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான ஆரோன் பின்ஞ் மற்றும் டேவிட் வோர்னர் ஆகியோர், அணிக்காகச் சிறப்பானதொரு ஆரம்பத்தை வெற்றுக்கொடுத்தனர்.

இருவரும் இணைந்து 121 ஓட்டங்களை இணைப்பாட்டமாக வெற்றிருந்த வேளை, அணித்தலைவர் ஆரோன் பின்ஞ், 53 ஓட்டங்கள் வெற்றிருந்தவேளை ஆட்டமிழந்து வெளியேறினார்.

இதனையடுத்து களம் புகுந்த உஸ்மான் கவாஜா, களத்தில் நின்று தாக்கு பிடிக்க, மறுமுனையில் இருந்த டேவிட் வோர்னர் அதிரடியாக துடுப்பெடுத்தாடினார்.

இருவரும் இணைந்து, 192 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்திருந்த வேளை, டேவிட் வோர்னர் 166 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார்.

இதனைத் தொடர்ந்து களமிறங்கிய கிளென் மக்ஸ்வெல், அதிரடியாக துடுப்பெடுத்தாடினார். ஆனாலும் அவரது அதிரடி நெடுநேரம் நீடிக்கவில்லை. அவர் 32 ஓட்டங்கள் வெற்றிருந்தவேளை, ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

இதன்பிறகு மறுமுனையில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி வந்த உஸ்மான் கவாஜா, 89 ஓட்டங்கள் வெற்றிருந்தவேளை ஆட்டமிழந்தார். இதனைதொடர்ந்து களமிறங்கிய ஸ்மித் 1 ஓட்டத்துடன் ஏமாற்றினார்.

இதனையடுத்து களமிறங்கிய மார்கஸ் ஸ்டொயினிஸ், 17 ஓட்டங்களுடனும் அலெக்ஸ் கெர்ரி 11 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் இருக்க, ஆஸ்திரேலியா அணி, 50 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 381 ஓட்டங்களை வெற்றுக்கொண்டது.

இதன்போது, பங்களாதேஷ் அணியின் பந்து வீச்சு சார்பில், சௌமியா சர்கார் 3 விக்கெட்டுகளையும், முஷ்டபிசுர் ரஹ்மான் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து, 382 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய பங்களாதேஷ் அணி, 3.5ஆவது ஓவரிலேயே தனது முதல் விக்கெட்டை இழந்தது.

சௌமியா சர்கார் 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேற, அடுத்து களமிறங்கிய சகிப் ஹல் ஹசன் சற்று ஆறுதல் அளித்தார்.

தமீம் இக்பாலும், சகிப் ஹல் ஹசனும் இணைந்து 79 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்றிருந்த வேளை, சகிப் ஹல் ஹசன், 41 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார்.

இதனையடுத்து களம்புகுந்த விக்கெட் காப்பாளர் முஷ்பிகுர் ரஹீம், சிறப்பாக துடுப்பெடுத்தாடினார். ஆனால் மறுமுனையில் இருந்த டமீம் இக்பால் 62 ஓட்டங்கள் வெற்றிருந்த வேளை, மிட்செல் ஸ்டாக்கின் பந்து வீச்சுக்கு போல்ட் முறையில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

இதன்பிறகு களமிறங்கிய எதிர்பார்ப்பு மிக்க வீரர் லிட்டொன் தாஸ், 20 ஓட்டங்களுடன் ஏமாற்றினார்.

இதனைத் தொடர்ந்து களமிறங்கிய மொஹதுல்லா, முஷ்பிகுர் ரஷீமிற்கு ஒத்துழைப்பு வழங்க, அணியின் ஓட்ட எண்ணிக்கை அதிகரித்தது.

இருவரும் இணைந்து 127 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்றிருந்த வேளை, மொஹமதுல்லா 69 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். இதன்பிறகு பங்களாதேஷ் அணியின் வெற்றி கனவு கலைந்து போனது.

இதன்பிறகு களமிறங்கிய எந்த வீரர்களும் அணிக்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை. இதனால் பங்களாதேஷ் அணியால் 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 333 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. இதனால் ஆஸ்திரேலியா அணி, 48 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. இதுவே பங்களாதேஷ் அணியின், ஒருநாள் போட்டிக்கான சிறந்த ஓட்ட எண்ணிக்கையாகும்.

இதன்போது, சபீர் ரஹ்மான் ஓட்டமெதுவும் பெறாத நிலையிலும், மெயிடி ஹசன் மற்றும் மஷ்ரபீ மோர்டாசா ஆகியோர் தலா 6 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். முஷ்பிகுர் ரஹீம் 103 ஓட்டங்களுடன் இறுதிவரை ஆட்டமிழக்காது களத்தில் இருந்தார்.

ஆஸ்திரேலியா அணியின் பந்து வீச்சுசார்பில், மிட்செல் ஸ்டாக், நெதன் குல்டர் நெய்ல் மற்றும் மார்கஸ் ஸ்டொயினிஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும், ஆடம் செம்பா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக 147 பந்துகளில் 5 சிக்ஸர்கள் 14 பவுண்ரிகள் அடங்களாக 166 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்ட ஆஸ்திரேலிய அணியின் டேவிட் வோர்னர் தெரிவு செய்யப்பட்டார்.

இந்த வெற்றியின் மூலம், ஆஸ்ரேலியா அணி 10 புள்ளிகளுடன் புள்ளி பட்டியலில் முதலிடத்திற்கு முன்னேறியது.

மறுபுறம் தோல்வியடைந்த பங்களாதேஷ் அணி, 5 புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்தில் உள்ளது. (ஐ)

## இன்றைய ஆட்டங்கள்

இந்தியா - ஆப்கானிஸ்தான்

பிற்பகல் 3 மணி

மேற்கிந்தியத் தீவுகள் - நியூசிலாந்து

மாலை 6 மணி

ICC CRICKET WORLD CUP ENGLAND & WALES 2019

## இனியாவது தமிழ் மக்களின்...

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இது பின்னர் தனியான பிரதேச செயலகமாக பிரிக்கப்பட்டது. 2012 ஆம் ஆண்டின் குடிசன மதிப்பீட்டின்படி மொறவெவ பிரதேச செயலர் பிரிவில் 72.3 சத வீதமானோர் சிங்களவர்கள்.

இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள் திருகோணமலையின் குடிசன பரம்பலில் பெருந் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

1901- 2012 காலப்பகுதியில், திருகோணமலையில் தமிழ் மக்களின் எண்ணிக்கை 17069 இல் இருந்து 122080 ஆக அதிகரித்த அதேவேளை, சிங்கள மக்களின் எண்ணிக்கை 1203 இல் இருந்து 101991 ஆக அதிகரித்தது. இது தமிழ் மக்களை பொறுத்தவரையில் 7.15 மடங்கு அதிகரிப்பாகவும் சிங்கள மக்களை பொறுத்தவரையில் 84.78 மடங்கு அதிகரிப்புமாகும். இதன் காரணமாக 1901 ஆம் ஆண்டு மொத்த சனத் தொகையின் கிட்டத்தட்ட 60 சத வீதமாக இருந்த தமிழ் மக்களின் சனத் தொகை 2012 இல் 32. 8 சதவீதமாக வீழ்ச்சி அடைந்திருக்கிறது.

அதேவேளை, சிங்கள மக்களின் எண்ணிக்கை இதே காலப்பகுதியில் 4.2 சத வீதத்தில் இருந்து 27 சத வீதமாக வும் முஸ்லிம் மக்களின் எண்ணிக்கை 29 சத வீதத்தில் இருந்து 40 சத வீதமாகவும் அதிகரித்துள்ளது. இந்த புள்ளி விவரங்கள் தற்போதைய நிலைமைகளை விளக்க தரப்பட்ட தரவுகள். ஆனால் வடக்கு கிழக்கில் முழுமையான ஆய்வின் பெறுபேறுகள் வெளியிடப்பட வேண்டும். பல வருடங்ளுக்கு முன்னர் சிங்கள புத்திஜீவிகளும் முஸ்லிம் புத்திஜீவிகளும் மேற்கொண்ட ஆய்வுகளை இப்பொழுதாவது எமது புத்திஜீவிகள் பொறுப்பாக மேற்கொள்ள வேண்டும்.

சிங்களத் தலைவர்களும், முஸ்லிம் தலைவர்களும் ஒற்றுமையாகச் சிந்தித்துத் தமது மக்களின் நலனைப் பேண நடவடிக்கைகள் எடுத்து வந்துள்ளனர். அவர்கள் தமது புத்திஜீவிகளின் முடிவுகளை ஆராய்ந்து வேண்டுவனவற்றை நடைமுறைப்படுத்தி தமது இன நலன்களை மேம்படுத்தி வந்துள்ளனர்.

கேவலம் கல்விக்குப் பெயர்போன எமது தமிழ்த் தலைவர்கள் முட்டையில் மயிர் பிடுங்கிக் கொண்டு காலந்தள்ளி வந்துள்ளனர். எமது அரசியல்வாதிகளின் இன்றைய பேச்சுக்களைப் பார்த்தால் அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை. எமது நிலங்கள் பறிபோகின்றன. இளைஞர்கள் வெளிநாடு நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றார்கள்.

எமது மக்கட் தொகை வெகுவாகக் குறைந்து வருகின்றது. இங்கிருப்பவர்கள் வாள்வீச்சிலும் வலிமைமிக்க போதைப்பொருள்களிலும் நாட்டம்காட்டி வருகின்றார்கள். நாங்கள் யதார்த்தத்தை மறந்து விட்டு முட்டாள்தனமான விவாதங்களில் ஈடுபட்டு வருகின்றோம்.

அறிவுள்ள திறமையுள்ள எம் தமிழ் இனம் எங்கே? என்ன நடந்தது எமக்கு? எமக்கு ஏற்பட இருக்கும் ஆபத்துக்களைப் புரிந்துகொண்டுதான் இவை குறித்து கவலை கொள்ளும் தமிழ் அரசியல் கட்சிகள் யாவும் ஓரணியில் சேர்ந்து செயற்படவேண்டிய தன் அவசியத்தை அண்மைக் காலமாக நான் வலியுறுத்தி வருகின்றேன்.

ஆனால் எம்மவர்கள் கட்சி நலம் பற்றியும் தமது சொந்த நலன்கள் பற்றியும் சிந்திக்கும் அளவுக்கு மக்கள் நலனில் கவலை கொள்வதாகத் தெரியவில்லை. இனியாவது எமது தமிழ் மக்களின் பிரதிநிதிகள் மிகவும் நேர்மையாகவும் விசுவாசமாகவும் தமிழ்ப் பற்றுடனும் இனப் பற்றுடனும் செயற்பட முன்வர வேண்டும். சலுகைகளுக்கு அடிபணியாத நேர்மையான தமிழ் மக்கள் பிரதிநிதிகள் உருவாக வேண்டும். நாம் ஒன்று சேர்ந்து மகாவலித் திட்டம் எமக்கு வேண்டாம் என்று கூறும் காலம் வெகு தொலைவில் இல்லை. *

## கடுகதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

## கிழித்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரணிலின் செய்தியை எடுத்துச் சென்ற அமைச்சர்கள், மனோ கணேசன், தயா கமகே மற்றும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஆகியோர் மீது சிலர் தாக்குதல் மேற்கொள்ள முயற்சித்தனர். இதனால் அவர்கள் அதிரடிப்படையினர் மற்றும் பொலிஸாரின் பாதுகாப்புடன் அங்கிருந்து வெளியேறினர்.

நேற்றுக் கல்முனைக்குச் சென்ற அமைச்சர்கள் மனோ கணேசன், தயாகமகே, கூட்டமைப்பு எம்.பிக்கள் எம்.ஏ.சுமந்திரன், க.கோடீஸ்வரன் ஆகியோர், அரசு 3மாதங்களுக்குள் கல்முனையை தரமுயர்த்தும் என்ற வாக்குறுதியை எழுத்து மூலமாக வழங்கி வாசித்துக் காண்பித்தனர்.

பிரதமரின் செய்தியைச் சுமந்திரன் வாசித்துக் காட்டிய பின்னர், அமைச்சர் தயா கமகே உரையாற்றிக் கொண்டிருந்தார். அப்போது திடீரென அங்கு குழுமியிருந்தவர்களின் சிலர் கோசம் போடத் தொடங்கினர். அரசியல்வாதிகளை வெளியேறுமாறும் அவர்கள் கூச்சல் போட்டனர்.

பிரதமர் வழங்கிய எழுத்துமூல வாக்குறுதியையும் போராட்டக்காரர்கள் கிழித்து எறிந்தனர். இதனால் அங்கு குழப்ப நிலை ஏற்பட்டது.

மூன்று மாத அவகாசமென்பது தம்மை ஏமாற்றும் நடவடிக்கையெனப் பொதுமக்கள் கொந்தளித்தனர்.

இதற்கு முன்னதாக, அமைச்சர் தயா கமகே இந்தப் பிரதேசத்துக்கு வந்து, தமிழர்களுக்கு எதிராகப் போராட்டம் நடத்தும் முஸ்லிம்களைச் சந்தித்து கலந்துரையாடல் நடத்தியிருந்தார். இது கல்முனை தமிழ் மக்களைக் கொதிப்படைய வைத்திருந்தது. நியாயமான கோரிக்கையுடன் போராட்டம் நடத்தும் தம்மை வந்து சந்திக்காமல் எதற்கு, நியாயமற்ற கோரிக்கையை முன்வைத்து போராட்டம் நடத்துபவர்களைச் சந்திக்கிறீர்கள் எனப் பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இதையடுத்து பிரமுகர்கள் வெளியேறி முற்பட்டபோது, பொதுமக்கள் பிரமுகர்களைச் சுற்றி வளைத்தனர். பொதுமக்களின் எதிர்ப்பு வலுவடைந்து தள்ளுமுள்ளுவரை சென்றது. பிரமுகர்களை பொதுமக்கள் சுற்றிவளைத்ததால், அவர்கள் அங்கிருந்து வெளியேற முடியாத நிலைமையேற்பட்டது.

இதன்போது அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஆகியோர் மீது தாக்குதல் மேற்கொள்ள முயற்சிக்கப்பட்டது. பொலிஸாரும், விசேட அதிரடிப் படையினரும் தலையிட்டு அவர்களைப் பாதுகாப்பாக அங்கிருந்து அகற்றினர்.

பிரமுகர்கள் மீது கையில் கிடைத்தவற்றைக் குழுவினர் எறிந்தனர். செருப்புக்களும் வீசப்பட்டன.

தாக்குதல் நடத்த முயற்சித்த குழுவினரில் கருணாவின் ஆதரவாளர்கள் அதிகம் இருந்தனர் எனக் கூறப்பட்டது.

இதனால் அந்தப் பகுதியே பெரும் அல்லோலகல்லோலப்பட்டது.

பிரமுகர்கள் வெளியேறும் போதும் மீண்டும் பொதுமக்கள் சுற்றிவளைத்து, எல்லைமீறி நடக்க முற்பட்டனர். எனினும், பிரமுகர்களின் பாதுகாப்புப் பிரிவினர் அவர்களை பாதுகாப்பாக வெளியேற்றினர். (ஐ)

சம்பவத்தில் மிருசுவில்-ஒட்டு வெளிப் பகுதியைச் சோந்த மாணிக்கம் மகேஸ்வரி (வயது50) என்ற பெண்ணே சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார்.

இந்தப் பெண்மணி வீட்டிலிருந்து புறப்பட்டு ரயில் பாதையைக் கடந்து ஆலயத்தில் வழிபட்டுவிட்டு மீண்டும் ரயில் பாதையைக் கடந்து வீட்டுக்குச் செல்ல முற்பட்டபோதே விபத்து சம்பவித்துள்ளது.

விபத்தில் சிக்கிய பெண்மணியின் உடல் சிதைவடைந்த நிலையில், சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு வந்த பொலிஸா பொதுமக்களை அப்புறப்படுத்திவிட்டுச் சிதைவடைந்த உடல் பாகங்களை அங்கிருந்து உடனடியாக மீட்டனார். (ஐ-07)

## அரசியலிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவ்வாறு நிரூபிக்கத் தவறும் பட்சத்தில் விமல் வீரவன்ஸ அரசியலிருந்து விலகுவாரா எனவும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமானரிஷாத்பதியுதீன் பகிரங்கச் சவால் விடுத்தார்.

நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றியபோதே அவர் இந்தச் சவாலை விடுத்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

இந்தச் சபையின் கருத்துச் சுதந்திரத்தைப் பயன்படுத்தி நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவசன்ஸ இனங்களுக்கு இடையே குரோத உணர்வுகளையும் வைராக்கிய சிந்தனைகளையும் தொடர்ந்து ஏற்படுத்தி வருகின்றார்.

என்னைப்பற்றி பொய்யான, அபாண்டமான குற்றச்சாட்டுக்களை சுமத்தி எனது நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தி வருகின்றார்.

தெமட்டகொட குண்டுவெடிப்புச் சம்பவத்தின் தற்கொலைதாரியான பெண் ஒருவர் எனது தாயின் சகோதரரின் மகள் எனத் திரும்பத் திரும்ப அவர் கூறி எனக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தி வருகின்றார்.

எனது தாய்க்குச் சகோதர்கள் எவரும் இல்லையெனவும் விமல் வீரவன்ஸ கூறுவது சுத்தமான பொய் எனவும் நான் பொறுப்புடன் இந்த சபையில் கூறுகின்றேன்.

இனங்களுக்கிடையே ஒற்றுமையைச் சீர்குலைத்து நல்லுறவை இல்லாமலாக்கும் விமல் வீரவன்ஸவின் கீழ்த்தரமான செயலை வன்மையாகக் கண்டிக்கின்றேன். வாக்குகளை அதிகரிப்பதற்காகவே விமல் இந்தப் பொய்களைப் பரப்புகின்றார்.

தற்போதைய சூழ்நிலையில் இனங்களுக்கிடையே நல்லெண்ணத்தை வளர்ப்பதே பொறுப்புள்ள அரசியல்வாதியின் பண்பாகும் ஆகும்.

நான் மூன்று பிள்ளைகளின் தந்தை, எனக்கென்று குடும்பம் உள்ளது, கட்சி ஒன்று உள்ளது. எனது கட்சியில் பெரும்பாலான ஆதரவாளர்கள் உள்ளனர். இவ்வாறான பொய்யான பிரசாரங்கள் மூலம் என் மீதும் எனது சமூகத்தின் மீதும் விமல் களங்கம் கற்பிக்கின்றார்.

மக்களை நிம்மதியாக வாழ வைப்பதும் அவர்களுக்கான பணிகளை முன்னெடுத்து இனங்களுக்கிடையே நல்லெண்ணத்தை வளர்த்தெடுப்பதே எனது வேலைத் திட்டங்களாக இருக்கின்றன.

பயங்கரவாதத்திற்கு முஸ்லிம்கள் எந்தக் காலத்திலும் ஆதரவளித்தவர்கள் அல்லர். இந்தச் சிறிய நாட்டில் இன உறவு தழைத்தோங்குவதற்கு முஸ்லிம்களாகிய நாம் பாடுபட்டு வருகின்றோம். உண்மை என்றொரு நாள் வெல்லும் என்பதே அனைத்து மதங்களினதும் போதனையாகும் – என்றார். (ஐ)

## யாழ். முஸ்லிம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குடியிருந்த அந்தக் காணி வண்ணை சிவன் கோவில் காணியென்றும், முறையற்ற விதத்தில் கொள்வனவு செய்யப்பட்ட அந்தக் காணியைத் தமக்குப் பகிர்ந்து வழங்குமாறும் நாவாந்துறைப் பொதுமக்கள் தெரிவித்தனர்.

பொதுமக்கள் நேற்று மாலை காணிக்குள் நுழைந்தமையால், காணியின் தற்போதைய உரிமையாளர்கள் எனக் கூறப்படுபவர்களுடன் முரண்பாடு எழுந்தது.

பொம்மைவெளிப் பகுதியில் 100 ஏக்கர் காணி, முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் பின்னணியில் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததாகச் செய்திகள் வெளியாகின.

யாழ். மாநகரசபையின் உறுப்பினர் நிலாம் அதன் தற்போதைய உறுப்பினர் எனச் சொல்லப்படுகிறது. அங்கு தொடர்மாடி குடியிருப்பு அமைத்து முஸ்லிம் மக்களைக் குடியமர்த்தும் திட்டம் உருவாக்கப்பட்டது. இது தொடர்பான ஆரம்பக் கலந்துரையாடல் ரிஷாத் பதியுதீன் தலைமையில் நடந்தபோது, யாழ் முதல்வர் இம்மானுவேல் ஆர்னோல்ட்டும் கலந்துகொண்டு, முஸ்லிம் குடியிருப்பை உருவாக்க முழு ஒத்தாசை வழங்குவதாக உறுதியளித்திருந்தார்.

இந்த நிலையில், நேற்று மாலை நாவாந்துறைப் பகுதி மக்கள் அந்த காணிக்குள் நுழைந்தனர். அங்கு நீண்டகாலமாக தாம் இருந்தனர் எனவும், முறையற்ற விதத்தில் அந்தக் காணி கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்கள் குற்றம்சுமத்தினர். அந்த காணிகள் தமக்குப் பிரித்து வழங்கப்பட வேண்டுமென்றனர்.

காணியின் தற்போதைய உரிமையாளர்கள் எனச் சொல்லப்படும் யாழ். மாநகர சபை உறுப்பினர் நிலாம், காணி உறுதியுடன் அங்கு வந்தார். இந்த விடயம் யாழ். பிரதேச செயலருக்கு அறிவிக்கப்பட்டு அவர் சம்பவ இடத்திற்குச் சென்றார். அது அரச காணியென்பதைப் பிரதேச செயலர் உறுதி செய்தார். மக்களைக் காணியை விட்டு வெளியேற்றி, நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார்.

காணி தொடர்பான ஆவணங்களையுடைய தற்போதைய உரிமையாளர் எனச் சொல்லப்படும் முஸ்லிம் வர்த்தகர் இன்று பொலிஸ் நிலையம் அழைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, இந்த காணி யாழ் வண்ணார்பண்ணை சிவன் ஆலயத்திற்குச் சொந்தமான காணியெனவும், கொழும்பில் வைத்து வெளிப்படுத்தல் உறுதிகள் தயார் செய்யப்பட்டே ரிஷாத்தின் பின்னணியில் கொள்வனவு செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## அடுத்த வாரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கான தண்டனை நிறைவேற்றம் எதிர்வரும் 24ஆம் திகதிக்குப் பின்னர் இந்த மாத இறுதிக்குள் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் இதற்கான நடவடிக்கை துரிதமாக இடம்பெற்று வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் தண்டனை அமுலாக்கத்துக்குச் சர்வதேச ரீதியாக எதிர்ப்புகள் உள்ள நிலையில் இதனை ஆரவாரமின்றி அமைதியான முறையிலும் விரைவாகவும் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை, மரண தண்டனை கைதிகளின் விவரங்களை அவசர அவசரமாக மனித உரிமைகள் ஆணைக்குழு திரட்டி வருவதாகக் கூறப்படுகின்றது. (ஐ)

## இளங்கோவனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சீர்திருத்தித் தரக்கூடிய ஒரு போராளியை நான் நேற்று கல்வித்துறையின் செயலாளராக நியமித்துள்ளேன் என்று வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் யாழ் இந்தியத்துணைத் தூதரகம் வடமாகாண கல்வி அமைச்சுடன் இணைந்து நேற்று ஏற்பாடு செய்த உலக யோகா தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வடக்கு மாகாணத்தின் கல்வித்துறையைச் சீர்திருத்துவதற்காக கல்விக்குத் தன்னை அர்ப்பணித்து அதனைச் சீர்திருத்தித் தரக்கூடிய ஒரு போராளியை நான் கல்வித்துறையின் செயலாளராக நியமித்துள்ளேன் . கடந்த எட்டு வருடமாக ஆளுநரின் செயலாளராகப் பாரிய பொறுப்புக்களோடு கடமையாற்றியவர். நம் தேசத்தின் மைந்தனை எதிர்வரும் ஜுலை மாதம் முதலாம் திகதி முதல் கல்வித்துறையை சீர்செய்வதற்காகக் கல்வி அமைச்சின் செயலாளராக நியமித்துள்ளேன்.

நாங்கள் ஒரு சமுதாயத்தை அடிப்படையாகப் பார்க்கும் போது மூன்று விடயங்களை குறித்து அந்த சமுதாயத்தின் உண்மையான தன்மையை உணரலாம். ஒன்று அந்தச் சமுதாயம் பொது இடங்களைப் பாவிக்கும் விதம். இலங்கையில் மூன்று மடங்கு அதிகமாக வீதி விபத்திற்கு முகம் கொடுக்கும் ஒரு மாகாணமாக வடமாகாணம் உள்ளது. அதற்கு காரணம் ஒழுங்கின்மை. நேரத்தை பாராமரிக்கத் தெரியாது நடத்தல் ஆகும். இரண்டாவதாக, ஒரு ஜனசமூகம் தன்னுடைய சமூகத்தில் இருக்கும் அழுக்குகளை எப்படி பராமரிக்கின்றது என்பது முக்கிய காரணம். வடமாகாணத்தைப் பொறுத்தவரையில் எங்கள் அழுக்குகளை நாங்கள் பராமரிக்கும் விதம் எங்கள் நாகரீகத்திற்கு முரணானது அல்ல. ஆகையினாலே நகரபிதாவுக்கு நாம் ஒத்துழைக்கவேண்டும். இது எங்கள் நாகரிகத்தின் பிரச்சினை. மூன்றாவதாக, ஒரு சமுதாயத்தின் அடிப்படையைக் காண்பதற்கு அந்த சமுதாயத்தின் ஆன்மீகத்துறை முக்கியமானதாகும். எனவே இந்த யோகா தினம் எங்கள் சமுதாயத்திற்கும் உங்களுக்கும் எனக்கும் இந்த மூன்று விடயங்களிலும் ஒரு சரியான திசையில் பாதையை அமைப்பதற்குச் சரியாக இருக்கட்டும் – என்றார். (ஐ)

## கல்முனைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தவிர்ப்புப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து வவுனியா கந்தசாமிகோவிலில் தேங்காய் உடைத்து வழிபாடுகள் இடம்பெற்றன.

வவுனியா இந்து ஆலயங்களின் ஒன்றியமும், சமூக அமைப்புக்களும் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்தப் போராட்டம் நேற்றுக் காலை 7.30 மணிக்கு இடம்பெற்றது.

கந்தசாமி ஆலயத்தில் இடம்பெற்ற விசேட வழிபாடுகளின் பின்னர் ஆலய முன்றலில் 108 தேங்காய்கள் உடைக்கப்பட்டன.

இதன்போது மடுக்கந்த மூவட்டகம ஆனந்த தேரர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான வினோ நோகதாரலிங்கம், ராஜா குகனேஸ்வரன் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (ஐ -100)

## பெரமுனவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பக்ஷ அறிவிப்பார் என முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்று முன் தினம் மாத்தறையில் செய்தியாளர்களிடம் பேசும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கட்சியின் தேசிய மாநாடு ஓகஸ்டில் இடம்பெறும். சுகததாஸ உள்ளக அரங்கில் இதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

மஹிந்த அறிவிக்கும் எந்தவொரு வேட்பாளருக்கும் நிபந்தனையின்றி ஆதரவளிக்கப் பொதுஜன பெரமுன, கூட்டு எதிரணியினர் தயாராக உள்ளனர் – என்றார். (ஐ)

## கோட்டாபய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாணம் நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு வந்தபோது, சாட்சியத்துக்கு அழைக்கப்பட்ட முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷ மன்றில் முன்னிலையாகாதமையால் வழக்கு செப்ரெம்பர் 27ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது.

அத்துடன், கோட்டாபய ராஜபக்ஷவை அன்றைய தினம் மன்றில் முன்னிலையாகிச் சாட்சியமளிக்கும் வகையில் அவருக்கு மீளவும் அறிவித்தல் வழங்குமாறு யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.எஸ்.பீற்றர் போல் உத்தரவிட்டார்.

2011ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் யாழ்ப்பாண நகரில் நடைபெறவிருந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் போராட்டத்தை ஒழுங்கமைப்பதில் ஈடுபட்டிருந்த லலித் குமார் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோர் ஆவரங்காலில் வைத்து காணாமல் ஆக்கப்பட்டனர்.

இது தொடர்பாக அவர்களின் உறவினர்களால் ஆள்கொணர்வு மனு 2012ஆம் ஆண்டு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுமீதான விசாரணையின்போது, இந்தக் கடத்தல் சம்பவம் தொடர்பாகச் சம்பந்தப்பட்ட சாட்சிகளை விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றுக்குக் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதனையடுத்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் 2012ஆம் ஆண்டு செப்ரெம்பர் 19ஆம் திகதி விசாரணைகள் ஆரம்பமாகின.

ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித்குமார, குகன் முருகானந்தனின் மனைவி, லலித்குமார் வீரராஜின் தந்தையார் ஆகியோர் ஆரம்பத்தில் சாட்சியமளித்திருந்தனர். தொடர்ந்து முன்னாள் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல உள்ளிட்ட சிலர் சாட்சியமளித்திருந்தனர்.

இந்த வழக்கு யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் அந்தோனிசாமி பீற்றர்போல் முன்னிலையில் நேற்று விளக்கத்துக்கு வந்தது.

இதன்போது சாட்சியம் வழங்குவதற்காக அழைக்கப்பட்ட முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷ, மன்றில் முன்னிலையாகவில்லை. அவர் சார்பில் சட்டத்தரணி அமரசிங்க முற்பட்டார்.

சாட்சி நேற்றைய தினம் மன்றில் முன்னிலையாக முடியவில்லை. அவர் சிங்கப்பூர் வைத்தியசாலையில் இருதய சத்திர சிகிச்சை பெற்று அங்கு ஓய்வு எடுத்து வருகிறார். அதனால் அவர் இந்த மன்றில் முன்னிலையாகிச் சாட்சியமளிக்கத் தவணை ஒன்றை வழங்குமாறு அவரது சட்டத்தரணி கோரினார்.

அதனால் வழக்குவிசாரணையை எதிர்வரும் செப்ரெம்பர் 27ஆம் திகதிவரை ஒத்திவைத்து நீதிவான் உத்தரவிட்டார். (ஐ)

# சஜித் பிரேமதாஸவே அடுத்த ஜனாதிபதி!

## அடித்துச் சொல்கிறார் தலதா



கொழும்பு, ஜுன் 22
அமைச்சர் சஜித் பிரேமதாஸ நிச்சயமாக நாட்டின் அடுத்த ஜனாதிபதியாக இருப்பார் என்று நீதி அமைச்சர் தலதா அத்துக்கோரள தெரிவித்தார்.

பாங்கிரிய பகுதியில் 204ஆவது மாதிரிக் கிராமத்தை நேற்று முன்தினம் திறந்து வைக்கும் நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆசியுடன், சஜித்பிரேமதாஸ ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட எமது கட்சி வாய்ப்பளிக்கும். அவர் ஜனாதிபதியாக வருவதை நாம் அனைவரும் எதிர்பார்த்திருக்கிறோம். அதைப் பற்றி கவலைப்படவேண்டாம் – என்றார். (ஐ)

# ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபாலவேதான்

## உறுதிப்படுத்துகிறார் அமரவீர



கொழும்பு, ஜுன் 22
அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படவில்லை என்றாலும், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே, நிச்சயமாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளராக போட்டியிடுவார் என்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

சுதந்திரக் கட்சியின் ஆதரவு இல்லாமல் எந்த வேட்பாளரும் வெற்றி பெற முடியாது என்பதால், பொதுஜன பெரமுன தமது வேட்பாளராக மைத்திரிபால சிறிசேனவையே தெரிவு செய்யும்.

மைத்திரிபால சிறிசேனவைச் சுதந்திரக் கட்சி விரைவில் ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கும்.

2018 உள்ளூராட்சித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு பெற்ற 17 இலட்சம் வாக்குகளை யாரும் புறக்கணிக்க முடியாது.

இந்தத் தேர்தலில் சுதந்திரக் கட்சியே, 'கிங் மேக்கராக' இருக்கும் என்பதில் சந்தேகமில்லை – என்றார். (ஐ)

# வவுனியாவில் 7 பேர் கைது

வவுனியா, ஜுன் 22
வவுனியா வடக்கு, கரப்புக்குத்திப் பகுதியில் உள்ள வன இலாகாவின் எல்லையிடப்பட்ட பகுதியில் வீட்டு நிர்மாணப் பணிகளை மேற்கொண்ட 7 பேர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வன இலாகாவினரும், விசேட அதிரடிப் படையினரும் இணைந்து இந்த 7 பேரையும் கைது செய்தனர்.

வவுனியா வடக்கு, சின்னடம்பன் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட கரப்புக்குத்திப் பகுதியில் வவுனியா வடக்குப் பிரதேச செயலகம் மற்றும் தேசிய வீடமைப்பு அதிகாரசபை என்பன இணைந்து மக்களுக்குக் காணிகளை வழங்கி வீட்டுத் திட்ட நடவடிக்கையை முன்னெடுத்துள்ளன.

இதன்போது வன இலாகாவின் எல்லையிடப்பட்ட பகுதியில் மூன்று வீடுகளை அமைப்பதற்குக் காணிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்தப் பகுதியில் வீட்டுத்திட்டப் பயனாளிகள் அத்திபாரம் போட்டுக் கொண்டிருந்த நிலையில் அங்கு சென்ற வன இலாகாவினரும், விசேட அதிரடிப் படையினரும் 7 பேரைக் கைது செய்தனர்.

அவர்களிடம் இருந்து அத்திபாரம் போடுவதற்கு கொண்டு சென்ற மண்வெட்டி உள்ளிட்ட உபகரணங்களையும் கைப்பற்றினர். (ஐ100)

# கல்முனைச் சிக்கலுக்குத் தீர்வு காண கூட்டமைப்பினால் மட்டுமே முடியும்!

## சபையில் கூறினார் அமீர் அலி



கொழும்பு, ஜுன் 22
கல்முனை வடக்கு உப பிரதேச செயலர் பிரச்சினையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் மட்டுமே தீர்க்க முடியும். வேறு எந்தவொரு சக்தியாலும் அதனை மேற்கொள்ள முடியாது என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினர் அமீர் அலி நாடாளுமன்றில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

காவியுடை தரித்தவர்கள் எல்லாம் இன்று ஐ.ஜி.பி.க்களாகிவிட்டனர். இவர்கள்தான் இன்று அமைச்சர்களைப் பதவி நீக்குவது, வீட்டுக்கு அனுப்புவது, பிரதேச சபைகளைப் பிரித்துக் கொடுப்பது போன்ற வேலைகளைச் செய்கின்றனர். கல்முனைப் பிரதேச செயலக விவகாரத்தைச் சுமுகமாகத் தீர்த்துக் கொள்ள தமிழ்க் கூட்டமைப்பு மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சிகளுக்கிடையில் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

ஆனால் வியாழேந்திரன், கருணா அம்மான் போன்றவர்கள் இந்த விடயத்தில் தலையிட்டு எம்.ஜி.ஆர்., சிவாஜிகளாகி விட்டனர்.

மட்டக்களைப்பு தமிழ்ச் சமூகம் செய்த மிகப்பெரிய அநியாயம் வியாழேந்திரனை எம்.பி.யாகத் தெரிவு செய்தது. படித்தவர்களை தெரிவு செய்யுமாறு கேட்டபோது படிப்பித்தவர்களைத் தெரிவு செய்து விட்டனர் – என்றார்.

# அபகரிக்கப்பட்ட வீதியை விடுவிக்ககோரி யாழ். நகரில் இன்று காலை கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம்,ஜுன்22
யாழ்.நகரப் பகுதியில் இருந்த பொது வீதி அபகரிக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்தும், அந்த வீதியைப் பொது மக்களின் பாவனைக்காக விடுமாறு கோரியும் இன்று சனிக்கிழமை கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தப் போராட்டம் இன்று முற்பகல் 10 மணிக்கு காங்கேசன்துறை வீதி யாழ்.நகரப் பகுதியில் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.நகரின் மத்தியில் அமைந்துள்ள கடை தொகுதிகளின் மத்தியில் வீதி ஒன்று காணப்பட்டது. அதனை வீதிக்கு அருகில் உள்ள கடை உரிமையாளர் சட்டத்திற்குப் புறம்பான முறையில் அபகரித்து தனது கடையுடன் இணைத்துள்ளார். இதனால் அவ்வீதியின் போக்குவரத்து முற்றுமுழுதாக நிறுத்தப்பட்டது.

இந்த விடயம் யாழ். மாநகர சபையின் நிர்வாகத்துக்கு தெரியப்படுத்தப்பட்டபோதும் அது தொடர்பில் சட்ட நடவடிக்கையை முன்னெடுக்க நிர்வாகம் தயக்கம் காட்டி வருகிறது.

இந்நிலையில் அபகரிக்கப்பட்ட இந்த வீதியை மீண்டும் மக்களின் பொதுப் பாவனைக்காக திறந்து விடவேண்டும் என்று கோரியும், அந்த வீதியை அபகரித்தவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுமே இன்று போராட்டம் நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தமிழரை எவரும் சீண்டுவதற்கு அனுமதிக்காது கூட்டமைப்பு!

## கூறுகின்றார் சிவமோகன் எம்.பி.



வவுனியா, ஜுன் 22
அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தித் தமிழர்களை எவரும் சீண்டுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று வரை அனுமதிக்கவில்லை எனக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

தங்களது இனத்தின் மீதான அடக்குமுறைகள் உச்சத்துக்குச் சென்று கொண்டிருந்தபோது முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒற்றுமையாக இராஜினாமா செய்தார்கள். அதுகூட தாங்கள் இருக்கும் அரசுக்கு எதிராகச் செய்யவில்லை. தாம் இருக்கும் அரசுக்கு ஆதரவு தெரிவிப்போம் என்றுதான் இராஜினாமா செய்தார்கள். அவர்கள் இவ்வாறு செய்தது இனவாதச் சிந்தனை உள்ள சிங்கள மேலாதிக்க அடிப்படைவாதிகளின் செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவே.

ஞானசார தேரரும், ரத்ன தேரரும் எடுத்துக்கொண்ட முயற்சிகள் நாட்டையே மீண்டும் இனப்படுகொலைக்குள்ளும் கலவரத்துக்குள்ளும் தள்ளும் நடவடிக்கைகளாகவே பார்க்கப்பட்டன. ஆகவே தான் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த நடவடிக்கையை எடுத்தார்கள்.

இந் நிலையில் தமிழர்களை எவரும் சீண்டுவதற்குத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு இன்றுவரை அனுமதிக்கவில்லை. அவசரகாலச் சட்டம் கொண்டு வரப்பட்ட பின்னரும்கூட அநாவசியமாக எமது இளைஞர்கள் மீது இவர்கள் கை வைப்பார்களோ என்ற சந்தேகம் இருந்தது. ஆகவே இவ்வாறான நடவடிக்கைகளை நாம் சுட்டிக்காட்டியிருந்தோம். அவ்வாறான நடவடிக்கைகளை நீங்கள் எடுக்கக் கூடாது எனத் தெரிவித்திருந்தோம்.

இது ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதத்திற்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட அவசரகாலச் சட்டம். எனவே அதை நோக்கியே உங்கள் நகர்வுகள் இருக்க வேண்டுமே தவிர அநாவசியமாக தமிழ் இளைஞர்கள் மீது கை வைக்கும் செயற்பாட்டை எடுக்கக்கூடாது என நாங்கள் தெளிவாக சொல்லியிருந்தோம். அவசரகாலச் சட்டம் கொண்டுவரப்பட்ட பின்னர் இராணுவம் அதனை தன் கையில் எடுத்துக் கொண்டு சோதனை என்ற ரீதியில் வைத்தியசாலைகளுக்கு முன்பாகவும் பாடசாலைகளுக்கு முன்பாகவும் செயற்பட்டு வரும் நடவடிக்கைகள் ஏற்றுக்கொள்ள முடியாதவை – என்றார். (ஐ – 100)

# காணி உறுதிப்பத்திரம் வழங்கும் நடமாடும் சேவை வவுனியாவில்

வவுனியா, ஜுன் 22
வவுனியா பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பண்டாரிக்குளம் கிராம அலுவலர் பிரிவில் காணி உறுதிப்பத்திரங்களுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நடமாடும் சேவை கிராம அலுவலர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது.

வவுனியா, பண்டாரிக்குளம் கிராம அலுவலர் பிரிவில் உள்ள பண்டாரிக்குளம், உக்கிளாங்குளம் ஆகிய பகுதிகளில் காணி உறுதிப்பத்திரமின்றி வசித்து வந்த 57 பேருக்குக் காணி உறுதிகளை வழங்குவதற்காகவே இந்த நடமாடும் சேவை இடம்பெற்றது.

இதில் உதவிப் பிரதேச செயலாளர் திருமதி ச.பிரியதர்சினி, கிராம அலுவலர்,காணி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ -100)



இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.06.2019 இல் வெளியிடப்பெற்றது.